# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண். 4


**என். கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| | தொலை நோக்குத் திட்டம் | 2 |
| | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP) | 10–13 |
| I | **ஆதி திராவிடர் நலன்** | |
| 1. | கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் | 14–43 |
| 2. | விடுதிகள் | 43–53 |
| 3. | சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 53 – 64 |
| 4. | தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 64–65 |
| 5. | டாக்டர் அம்பேத்கர் விருது | 65–66 |
| 6. | சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல் | 66–67 |
| 7. | 1955–ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015 | 67–72 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 8. | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 72–73 |
| 9. | சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 74 |
| 10. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 75 |
| II. | **பழங்குடியினர் நலன்** | |
| 1 | கல்வி | 77–85 |
| 2. | கல்வி உதவித் தொகை | 85–91 |
| 3. | பழங்குடியினர் நல விடுதிகள் | 91–92 |
| 4. | தொழிற்பயிற்சி நிலையங்கள் | 93–94 |
| 5. | தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி | 94–97 |
| 6. | மாநில அரசுத்திட்டங்கள் | 97–105 |
| 7. | ஒன்றிய அரசுத் திட்டங்கள் | 105–112 |
| 8. | பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 | 112–115 |
| 9. | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | 115–117 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 10. | பழங்குடியினர் ஆய்வு மையம் | 117–119 |
| 11. | சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 120 |
| **III.** | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| 1. | பொருளாதார முன்னேற்ற திட்டங்கள் | 122–130 |
| 2. | வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 131–142 |
| 3. | இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் | 142–154 |
| 4. | கட்டுமானப் பிரிவு | 155–157 |
| **IV.** | **தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்** | 158 |
| **V.** | **நலக் குழுக்கள்** | |
| அ) | தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் | 159 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| VI. | **நல வாரியங்கள்** | |
| 1. | தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் | 160–161 |
| 2. | தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் | 161–163 |
| 3. | தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் | 163–164 |
| 4. | நரிக்குறவர் நல வாரியம் | 164–165 |
| VII. | **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2024–2025–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு** | 166 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

**முன்னுரை:**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 398)

என்ற செந்நாப்போதர் திருவள்ளுவரின் குறளுக்கிணங்க, கல்வியின் மூலமே அனைத்து புகழினையும் அடைய இயலும் என்பதில் உறுதி கொண்டு, கல்வியினை பெறுவதில் உள்ள தடைகளை நீக்கி எதிர்காலத்தை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளவும், சாதி வேறுபாடுகளற்ற, சமூக நீதி அடிப்படையிலான சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கவும் உறுதி பூண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை அனைத்து நிலைகளிலும் உயர்வடையச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

## தொலை நோக்குத் திட்டம்

- 2030 ஆம் ஆண்டிற்குள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை எட்டுதல்.

- கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத்திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.

### நிருவாக அமைப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வியறிவு மற்றும் சமூக, பொருளாதார நிலைகளில்

உயர்த்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை சமூகத்தின் இதர பிரிவினருக்கு இணையாக மேம்படுத்தும் நோக்கத்துடன் தனித்துவமான திட்டங்களை உருவாக்க 1988–ஆம் ஆண்டில் சமூக நலத்துறையிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனித்துறையாக தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல் பிரிவு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், சமூகநீதி மற்றும் சமத்துவ மையம் ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் பல நல வாரியங்களும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

ஆதி திராவிடர் நல இயக்குநரகம், ஆதி திராவிடர் மக்களின் தேவையினை கண்டறிந்து குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், வீட்டுமனை பட்டா வழங்குதல்,

ஆதி திராவிட மாணவர்களுக்காக பள்ளிகள் மற்றும் விடுதிகள் தோற்றுவித்து நடத்துதல், கல்வியினை மேம்படுத்த கல்வி உதவித் திட்டங்களான ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் திட்டங்கள், உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம், வெளிநாடுகளில் உயர் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித் திட்டங்களை செயல்படுத்துதல், ஆதி திராவிட மக்கள் எதிர்கொள்ளும் சமூக சிக்கல்களுக்கு தீர்வு அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

பழங்குடியினர் நல இயக்குநரகம் பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டினை உயர்த்திடும் நோக்கில் உண்டி உறைவிடப் பள்ளிகள், ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், கல்வி உதவித் திட்டங்கள், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள், குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் தனிநபர் மற்றும் சமுதாய வன உரிமைகள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, பொருளாதார மேம்பாடு அடையச் செய்யும் நோக்குடன் மானியத்துடன் கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், இளைஞர்கள் சுய தொழில் துவங்கிடவும், வேலைவாய்ப்புக்கான திறன் பெற்றிடவும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் சார்ந்த கட்டுமானப் பணிகள் ஆகியவை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூகநீதி மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைகளை வளர்ப்பதற்கான ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பாடப்பிரிவுகள் நடத்தவும், அதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சமூகநீதி மற்றும் சமத்துவ மையம் சென்னை சமூகப்பணி பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையம் சமூகநீதி மற்றும் சமத்துவம் சார்ந்த தகவல்கள் சேகரித்தல், மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் ஆராய்ச்சி

படைப்புகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 ஆகிய சட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான செயல்களை தடுத்து, அவர்களின் உரிமைகளை பாதுகாத்து வருகிறது. இச்சட்டத்தின் செயலாக்கத்தினை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் 37 வகையான பழங்குடி இன மக்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்த ஆராய்ச்சியினை மேற்கொள்ளவும், உரிய தரவுகளை அரசுக்கு வழங்கவும் நீலகிரி மாவட்டத்தில் **பழங்குடியினர் ஆய்வு மையம்** செயல்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்திடவும் அவர்களது முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்

நோக்கிலும் **தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்** 13.10.2021 அன்று உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

புதிரை வண்ணார் இன மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு **தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்** 15.10.2009–இல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம், 03.08.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நரிக்குறவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கும், அவர்கள் மாற்றுத் தொழில் புரிவதற்கு தேவையான நிதியுதவி அளிப்பதற்கும், "**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்**" 27.05.2008 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம், 30.10.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்** 20.04.2007–முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் 08.09.2023–இல் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

தூய்மைப் பணிபுரிவோருக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு **தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்** 11.06.2007 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 08.09.2023–இல் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வசித்து வரும் பழங்குடியின மக்களின் தேவைகளை அறிந்து புதிய திட்டங்களை திட்டமிடவும், அவர்களது ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக சிறப்பான ஆலோசனைகளை வழங்கிடவும் **தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்** 04.09.1961 அன்று உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மன்றம் 30.11.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு, 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் **ரூ.3706.05 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திட்ட கண்காணிப்பு அலகு**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள், மாணாக்கரின் கல்வி நலனுக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை திட்டங்கள், வன உரிமைச் சட்டம் 2006ன் செயல்பாடு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு துணைத் திட்டங்கள் மற்றும் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் செயலாக்கத்தினை கண்காணிக்கவும், நலத்திட்டங்களின் பலன் தகுதியான மக்களுக்கு சென்றடைவதை உறுதிசெய்யவும், இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாக செலவிடப்படுவதை கண்காணிக்கவும் திட்ட கண்காணிப்பு அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதி ஆண்டில் ரூ.2.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP )

சமூக – பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நிலையினை உயர்த்திடும் நோக்குடன் 1976–1977–ஆம் ஆண்டிலிருந்து பழங்குடியினர் துணைத் திட்டமும், 1980–1981–ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் துணைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பயன்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அவர்களின் மக்கள் தொகையான 20.01 சதவீதம் மற்றும் 1.17 சதவீதம் மக்கள் தொகைக்கு ஏற்ப கிடைப்பதை உறுதிசெய்வதற்காக இத்துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடர் அறிவிப்பின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஒரு சிறப்புச் சட்டம் (தமிழ்நாடு அரசு சட்டம் 20/2024) இயற்றப்பட்டு 29.05.2024 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.

இச்சட்டத்தின்மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்டத்தை தயாரித்தல், ஒப்புதல் அளித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, நிதியை குறித்தொதுக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மேற்காணும் திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்கும் துறையாக செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் இத்துறையின் செயலாளர் கண்காணிப்பு அலுவலராக செயல்படுகிறார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதியினை அனைத்து செயலாக்கத் துறைகளும் விரைவாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்ய, மாதந்திர முன்னேற்ற அறிக்கைகள் அனைத்து செயலாக்க துறைகளிலிருந்தும் பெறப்பட்டு செயல்பாட்டினை கண்காணிக்கிறது. தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்ட

மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவால் (State Level Monitoring Committee) துறைகளின் செயல்பாடு காலமுறையாக ஆய்வு செய்யப்படுகிறது.

2024–2025–ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.88,130.83 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.19363.56 கோடி (**21.97**%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1738.40 கோடி (**1.97**%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2024–2025 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் துறை சார்ந்த (SECTORAL) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்**

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்.** | **பிரிவு** | **ஆதி திராவிடர் துணைத் திட்டம்** | **பழங்குடியினர் துணைத் திட்டம்** |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 3194.52 | 715.46 |
| 2 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி | 768.00 | 81.00 |

(ரூ. கோடியில்)

| வ. எண். | பிரிவு | ஆதி திராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 3 | ஊரக வளர்ச்சி | 1633.26 | 208.31 |
| 4 | சமூகநலன் மற்றும் சத்துணவு | 6576.32 | 408.36 |
| 5 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 1058.45 | 46.11 |
| 6 | வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும் | 1257.55 | 60.53 |
| 7 | கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு | 1257.94 | 136.43 |
| 8 | மக்கள் நல்வாழ்வு – குடும்பநலன் | 844.01 | 54.75 |
| 9 | போக்குவரத்து | 150.00 | 0.00 |
| 10 | பொதுவான பொருளாதாரப் பணிகள் | 2335.58 | 4.89 |
| 11 | தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 52.72 | 9.20 |
| 12 | சிறப்பு பகுதித்திட்டங்கள் | 20.71 | 5.05 |
| 13 | தொழிலும் கனிமங்களும் | 200.22 | 2.44 |
| 14 | ஏனைய சமூகப்பணிகள் | 14.28 | 5.87 |
| **மொத்தம்** | | **19363.56** | **1738.40** |

# I. ஆதி திராவிடர் நலன்

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம், ஆதி திராவிட மக்களை சமூக, சமத்துவம் மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தும் நோக்கத்தில் அரசு பல்வேறு முயற்சிகளையும், நலத்திட்டங்களான, கல்வி, திறன்மேம்பாடு, வீட்டுவசதி மற்றும் சுகாதாரநலன் செயல்முறைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இதன் பலனாக அனைத்து கல்வி சேர்க்கை விகிதம் தேசிய சராசரியை விட உயர்ந்து காணப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011–ஆம் ஆண்டின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில் 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர்.

## 1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

***அறிவைத் தேடி ஓடுங்கள்...!***
***நாளைய வரலாறு உங்கள் நிழலாக தேடி ஓடி வரும்...!***

என்ற அண்ணல் அம்பேத்கரின் பொன்மொழிக்கிணங்க, இளைய சமுதாயத்தினர்

தங்கள் இலட்சிய கனவுகளை அடைய ஏதுவாக மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதற்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் கல்வியறிவு 80.09 விழுக்காடாகவும், ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.29 விழுக்காடாகவும் உள்ளது. இத்துறைக்கான 2024–2025–ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.2992.57 கோடியில், கல்வி சார்ந்த செயல்பாடுகளுக்காக ரூ.2252.51 கோடி (75.27 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை, விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கப்படுவதுடன், ஆதிதிராவிடர் அதிகமாக வசிக்கும் பகுதியில், பள்ளி மற்றும் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமார் இரண்டு இலட்சம் மாணாக்கர் பயன்பெற்று வருகின்றனர்.

## 1.1 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்

ஆதிதிராவிட மாணாக்கருக்கு தரமான கல்வியினை வழங்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு கல்வி விகிதத்தினை உயர்த்த ஆதிதிராவிடர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், 1,138 பள்ளிகள் இத்துறையால் தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பள்ளிகள் மாணாக்கரின் கல்வி, பாடப்புத்தகங்கள், உணவு போன்றவை எவ்வித தடையுமின்றி கிடைப்பதை உறுதி செய்கிறது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 28,85,168 ஆதி திராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம் – ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முகமை)

**ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம் 2023–2024**

| பள்ளிகள் வகைப்பாடு | எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 833 | 16,477 | 16,520 | 32,997 |
| நடுநிலைப் பள்ளிகள் | 99 | 4,678 | 4,484 | 9,162 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 108 | 5,654 | 5,223 | 10,877 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 98 | 14,557 | 13,596 | 28,153 |
| **மொத்தம்** | **1,138** | **41,366** | **39,823** | **81,189** |

பள்ளிகளுக்கு நூலகங்கள், கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகிய வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கு மட்டுமின்றி கல்வித்தரத்தை உயர்த்திட ஆசிரியர்களுக்கும் நவீன கற்பித்தல்

உத்திகள், கணினி தொழில்நுட்பம், மொழியாற்றல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 1.2 புதிய முன்னெடுப்புகள்

- அரசு சட்டக்கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் மாணாக்கருக்கு சிறந்த சட்ட நிறுவனங்கள் / வழக்கறிஞர்களிடம் அவர்களது பாடத்திட்டத்திற்கேற்ப உட்பயிற்சி (Internship) பெறுவதற்கு உதவித்தொகையாக ரூ.10,000/– வழங்கப்படுகிறது. 2023–2024–ஆம் நிதியாண்டில் 774 மாணாக்கருக்கு ரூ.77.40 இலட்சம் உட்பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு சட்டக்கல்வி இயக்ககத்தின் மூலம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதியரசர்களிடம் உட்பயிற்சி பெறுவதற்கு கூடுதல் உதவித்தொகையாக 15 மாணாக்கருக்கு தலா ரூ.10,000 வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு 2024–2025–ஆம் நிதியாண்டில், ரூ.65.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மேல்நிலைப் பள்ளி பயிலும் மாணாக்கரின் உயர்கல்வி படிக்கும் ஆர்வத்தை தூண்டவும், அதற்கான வாய்ப்புகள் குறித்து தெரிந்துகொள்ளவும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்வதன் மூலம் பள்ளிப்படிப்புக்கு பின் மாணாக்கர் தங்களுக்கான துறையை தேர்ந்தெடுப்பதில் உள்ள குழப்பங்களை தவிர்த்து தெளிவான முடிவெடுக்க ஏதுவாக சென்னை – ஐஐடி, கோயம்புத்தூர் – வேளாண்மை பல்கலை கழகம், PSG தொழில்நுட்ப கல்லூரி, திருச்சி – தேசிய தொழில்நுட்பக் கழகம், மதுரை– அரசு மருத்துவ கல்லூரி, சேலம் – அரசு பொறியியல் கல்லூரி மற்றும் வேலூர்– கிறிஸ்துவ மருத்துவ கல்லூரி, வேலூர் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

- 2023–2024ஆம் கல்வியாண்டு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கு தொழில் மற்றும்

வேலைவாய்ப்பு அதிகமுள்ள படிப்புகள் மற்றும் அப்படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் குறித்து வழிகாட்டு (Career Guidance) ஆலோசனை முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. இதன்வாயிலாக 13,000 மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் உயர்கல்வி குறித்த தகவல்கள் பிரசுரங்கள் வாயிலாகவும், விழிப்புணர்வு பேச்சு வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

- 90 மேல்நிலைப்பள்ளிகள், 29 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் 87 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) அமைக்கப்பட்டுள்ளன. 8 மேல்நிலைப்பள்ளிகள், 79 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 83 மேல்நிலைப் பள்ளிகள், 103 உயர்நிலைப்

பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (High Tech Lab) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுக்கு ரூ.36.00 இலட்சம் வரை கல்வி உதவித் தொகை பெறுவதற்கு குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு, மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், அதிகப்படியான மாணவர்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளில் பொறியியல், நிதி, உலக சுகாதாரம், உலக தொழில் மற்றும் சட்டம் போன்ற படிப்புகளில் சேர்ந்து 54 மாணாக்கர் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் சார்பான கலைத் திருவிழா 26.12.2023 முதல் 30.12.2023

வரை செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்றது. இக்கலைத் திருவிழாவில் 9–ஆம் வகுப்பு பயிலும் 150 மாணாக்கர் 5 நாட்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, கலைத்திறனை வளர்த்துக் கொண்டனர்.

- 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கரின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் பட்டதாரி சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி சிறப்பு ஆசிரியர்கள் நியமனம் செய்து மதிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18,000 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

- மேற்காணும் ஒப்பற்ற முன்னெடுப்புகளின் பயனாக 2023–2024–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பில் ஆதிதிராவிடர் பள்ளி மாணாக்கர் 85.40 சதவீதமும், 12–ஆம் வகுப்பில் 91.15 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இத்தேர்ச்சி விகிதம் முந்தைய ஆண்டுகளை காட்டிலும் அதிகமாகும்.

- கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு கலை, திறன் மேம்பாட்டு பயிற்சி, மாணாக்கர்களுக்கான அரசின் திட்டங்கள், உயர்கல்வி படிப்பு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் "களமாடு" என்ற கோடை கலைத்திறன் முகாம் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடைபெற்றது.

## 1.3 கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

ஆதிதிராவிடர் மாணாக்கர் கல்வியில் சிறந்து விளங்கவும் எதிர்கால கனவுகளை அடைய ஏதுவாகவும் இத்துறை பின்வரும் கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகை திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### (அ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

உயர்கல்வியில் ஆதி திராவிடர் மாணக்கரை உயர்த்திடும் நோக்குடன் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இச்செலவினம் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி (Academic allowances) ஆகியவை கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

**(i) கல்விக் கட்டணங்கள்**

அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு அரசால் நியமிக்கப்பட்ட கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் (Compulsory and

Non – refundable Fees) கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**(ii) கல்விப்படி (Academic Allowance)**

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழிற்படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு, மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/ICWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes) | 13,500/– | 7,000/– |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், | 9,500/– | 6,500/– |

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing),M.Pharm, M.P.T, etc., ) | | |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc., ) | 6,000/– | 3,000/– |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற்பயிற்சிக் கல்வி etc.,) | 4,000/– | 2,500/– |

மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையில் 60 விழுக்காடு ஒன்றிய அரசு பங்குத் தொகை நேரடியாக விடுவிக்கப்படும் நிலையில் 2024–2025–ஆம் நிதியாண்டில் 40 விழுக்காடு மாநில அரசு பங்குத் தொகையை விடுவிக்கும் பொருட்டு இத்திட்டத்திற்கென, ரூ.472.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**

கிறித்துவ ஆதி திராவிடர் மாணக்கர் பயன்பெறும் வகையில் மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கல்வி உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கு இணையாக இத்திட்டத்தின் கீழ் மாநில அரசால் சிறப்பு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டில், ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

மாணவர்கள் சிரமமின்றி கல்வி பயில கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வந்தாலும் அரசு விடுதிகள் அல்லாத கட்டண விடுதிகளில் தங்கி பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கரின் விடுதி செலவினை ஈடுசெய்ய கூடுதலாக சிறப்பு உதவித்தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

| வ. எண். | படிப்புகள் | உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | இளநிலை பட்ட, பட்டய மற்றும் தொழிற் படிப்புகள் | ரூ.7,500/– |

| வ. எண். | படிப்புகள் | உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு) |
|---|---|---|
| 2 | முதுநிலை பட்ட, பட்டய மற்றும் தொழிற் படிப்புகள் | ரூ.8,000/- |

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென, 2024-2025-ஆம் நிதியாண்டில், ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) வெளிநாடுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்**

இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இரண்டு அடுக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் ரூ.8.00 இலட்சத்திற்கு குறைவான ஆண்டு வருமான உச்ச வரம்பு உள்ள மாணாக்கருக்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மிகாமலும், ரூ.8.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சத்திற்கு குறைவான ஆண்டு வருமான உச்ச வரம்பு உள்ள மாணாக்கருக்கு ரூ.24.00 இலட்சத்திற்கு மிகாமல் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாணவர்கள் சேர்க்கை பெறும் பல்கலைக் கழகங்கள் QS (Quacquarelli Symonds) தரவரிசையில் 1000 –க்குள் தரம் பெற்றிருக்க வேண்டும்.

கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் ஆண்டின் ஏப்ரல் முதல் நாளில் (1st April) பட்ட மேற்படிப்பு பயிலும் மாணக்கர் 35 வயதிற்குட்பட்டும், முழுநேர முனைவர் ஆராய்ச்சி மற்றும் அதற்கு மேல் ஆராய்ச்சி படிப்புகள் பயிலும் மாணக்கர் 40 வயதிற்குட்பட்டும் இருக்க வேண்டும்.

2024–2025–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவற்காக ரூ.8.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கர் உயர்படிப்புகளில் மட்டுமல்லாமல் ஆராய்ச்சி படிப்புகளிலும் சிரமமின்றி கல்வி பயில ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகைத் திட்டம் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம் ஆகிய பிரிவுகளில் ஆய்வுகளில் ஈடுபடும் மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் 1,600 மாணாக்கருக்கு தலா ரூ.1,00,000/– வீதம் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரத் தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ஒன்றிய, மாநில அரசுகளால் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**திட்டக்கூறு –1**

**ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்**

ஆதிதிராவிட மாணாக்கரின் கல்வி இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் உள்ள ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இம்மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென, 2024–2025–ஆம் நிதியாண்டில், ரூ.50.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திட்டக்கூறு –2**

**தூய்மைப்பணி மற்றும் சுகாதாரக்கேடு விளைவிக்கும் பணிகளில் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்**

தூய்மைப் பணி மற்றும் அதற்கு இணையான பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு சுகாதாரக்கேடு

ஏற்பட வாய்ப்புள்ளதால் அத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரையிலான படிப்புகளை பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித் தொகை பெற தகுதி பெறுவர்.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் கல்வி உதவித் தொகை வரவு வைக்கப்படுகிறது.

| **திட்டக் கூறு** | **வெளி மாணாக்கர் (Day Scholar)** | **விடுதி மாணாக்கர் (Hosteller)** |
|---|---|---|
| | **( ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்)** | |
| திட்டக்கூறு –1 | 3,500/–<br>(வகுப்பு 9–10) | 7,000/–<br>(வகுப்பு 9–10) |
| திட்டக்கூறு –2 | 3,500/–<br>(வகுப்பு 1–10) | 8,000/–<br>(வகுப்பு 3–10) |

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.5.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .4 கல்விக் கட்டணச் சலுகைகள்

கல்வியின் மூலம் சமுதாய மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்து அதை செயல்படுத்தும் விதமாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கர் அனைவருக்கும், வருமான உச்ச வரம்பின்றி, பின்வரும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) கல்லூரி மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணச் சலுகை

(ஆ) பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(இ) முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(ஈ) கல்லூரி மாணாக்கருக்கான விண்ணப்பக் கட்டண விலக்கு

(உ) ஆதி திராவிடர் பள்ளி மாணாக்கருக்கு சிறப்புக் கட்டணச் சலுகை

(ஊ) பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு

மாணாக்கருக்கான பொதுத் தேர்வுக் கட்டண விலக்கு.

மேற்காணும் திட்டங்களுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில், ரூ.18.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.5 பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம்**

ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில், மாநில அரசால் பெண்கல்வி ஊக்கத்தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவியர் இடைநிற்றலின்றி தமது படிப்பைத் தொடர்வதை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் இச்சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாணவியருக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்) |
|---|---|
| 3 முதல் 5 வரை | 500/- |
| 6 | 1,000/- |
| 7 மற்றும் 8 | 1,500/- |

இத்திட்டத்திற்கென, 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.45.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6 பரிசுத் தொகைத் திட்டம்

ஆதிதிராவிடர், கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் நன்கு படித்து நல்ல வேலை வாய்ப்புகளை பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்படிப்பு ஆகிய உயர்கல்வி படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெறும் மாணாக்கருக்கு இப்பரிசுத்தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| படிப்பு | பரிசுத் தொகை (ஒருவருக்கு) (ரூபாயில்) | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| இளங்கலை | 3,000/- | 500 |
| முதுகலை | 5,000/- | 300 |
| தொழிற்படிப்பு | 6,000/- | 200 |

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில், ரூ.42.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.7 உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா**

உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள பாடப்பிரிவுகள், ஆய்வகங்கள், நூலகங்கள், வகுப்பறைகள், கல்வி பயிற்றுவிக்கும் முறைகள் என அனைத்தையும் பார்வையிடவும், மாணவ / மாணவியர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதலையும், உயர்கல்வி படிக்கும் ஆர்வத்தை தூண்டவும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்வதன் மூலம் பள்ளிப்படிப்புக்கு பின் மாணாக்கர் கல்லூரியில் தங்களுக்கான துறையை தேர்ந்தெடுப்பதில் உள்ள குழப்பங்களை தவிர்த்து தெளிவான முடிவெடுக்க இயலும்.

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களை தங்கள் மாவட்டங்களில் உள்ள மத்திய / மாநில அரசால் நடத்தப்படும் உயர்கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களுக்கு அழைத்துச்செல்ல ஒரு பள்ளிக்கு ரூ.25,000/– வீதம் 206 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதி ஆண்டில் ரூ.51.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.8 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பொருளாதார சுமையினைக் குறைத்திடும் வகையில் இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப்புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை

பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக்கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில், 10–ஆம் வகுப்பில் பயிலும் 17,037 மாணாக்கருக்கும் மற்றும் 12–ஆம் வகுப்பில் பயிலும் 14,487 மாணாக்கருக்கும் ரூ.1.80 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.2.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.9 சீருடைகள் வழங்குதல்

1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு பள்ளிக்கல்வித்துறை மூலமும், 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தாட்கோ மூலமாகவும் சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.14.00 கோடி செலவில் 34,640 மாணவர்களுக்கும் மற்றும் 23,389 மாணவியர்–களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென, 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.14.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.10 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்**

தற்போது நிலவும் வேலை வாய்ப்புகளுக்கான போட்டிச் சூழலில் மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணித் தேர்வுகள் உள்ளிட்ட இதர போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தயாராகும் வகையிலும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு ஆண்டுதோறும் வாங்கி வழங்கப்படுகின்றன.

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் / பருவ இதழ்கள் (ஆண்டுக்கு) (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | 1,450/– |
| 2. | பள்ளி விடுதிகள் | 3,690/– |

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் / பருவ இதழ்கள் (ஆண்டுக்கு) (ரூபாயில்) |
|---|---|---|
| 3. | கல்லூரி விடுதிகள் | 7,997/- |

பள்ளி விடுதிகளுக்கு செய்தித்தாள்கள் (2 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்), மாத இதழ்களான திட்டம், சம்பக், மேஜிக்பாட், டெல் மி ஒய், வருட புத்தகமான மனோரமா இயர் புக் மற்றும் போட்டித் தேர்வுக்கான வினா வங்கி ஆகியவை வழங்கப்படுகின்றன.

கல்லூரி விடுதிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் செய்தித்தாள்களுடன் மாத இதழ்களான திட்டம், யோஜனா, குருஷேத்ரா, வார இதழ்களான வேலைவாய்ப்பு செய்திகள், இந்தியா டுடே, வருட புத்தகமான இந்தியா இயர் புத்தகம் மற்றும் போட்டித் தேர்வுக்கான வினா வங்கி ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.57.06 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.60.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1 .11 மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மாணாக்கர் குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்ல உதவிடும் நோக்குடன் மிதிவண்டிகள் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் கல்வி பயிலும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. விடுதிகள்

கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய அளவு விடுதி வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யவும், தொலைதூர கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணாக்கர் தங்களது கல்வியினை தொடர்ந்திடும் வகையில், அவர்கள் படிக்கும் கல்வி

நிறுவனங்களுக்கு அருகில் ஆதி திராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:–

## ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2023–2024)

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பள்ளி விடுதிகள் | 738 | 403 | 1,141 | 53,881 | 28,530 | 82,411 |
| கல்லூரி விடுதிகள் | 71 | 81 | 152 | 7,881 | 5,849 | 13,730 |
| ஐ.டி.ஐ. விடுதிகள் | 16 | 2 | 18 | 1,356 | 116 | 1,472 |
| பாலிடெக்னிக் விடுதிகள் | 3 | 2 | 5 | 178 | 110 | 288 |
| முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 9 | 6 | 15 | 693 | 315 | 1,008 |
| **மொத்தம்** | **837** | **494** | **1,331** | **63,989** | **34,920** | **98,909** |

- தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 2.1 புதிய முன்னெடுப்புகள் 2023–2024

- வளர்ந்து வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டும் தங்குமிடத்தின் தேவையினை கருதியும், மாணவர்களின் திறனை மேம்படுத்துவதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் MC ராஜா நவீன கல்லூரி மாணவர் விடுதி சென்னையில் கட்டுவதற்கு 12.07.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

- சென்னை மாவட்டத்தில் உள்ள 23 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் எட்டு நவீன மாணாக்கர் விடுதிகள் கட்டும் பணிகள் ரூ.100.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சென்னை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவியர் விடுதிகளும், மதுரையில் கல்லூரி மாணவர் விடுதியும், மொத்தம் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

- கல்லூரி விடுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் உள்ள 22 விடுதிகளில் 2197 மாணாக்கர் பயன்பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 14 மாவட்டங்களில் 23 கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ரூ.21,19,749/- மதிப்பீட்டில் E-library அமைக்கப்பட்டுள்ளது.

- விடுதிகளில் ஏற்படும் சிறுபராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாணாக்கரின் எதிர்பாரா மருத்துவச் செலவினம் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஒரு விடுதிக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- விடுதிகளை சீரான முறையில் பராமரித்து, மாணாக்கருக்கு கல்வி பயில நல்ல சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன் கூடிய விடுதி மேலாண்மை அமைப்பிற்கு ரூ.27.15 கோடி ஒதுக்கப்பட்டு 1275 விடுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 2024-2025ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் ஆகிய

ஐந்து மாவட்டங்களில் விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

- விடுதியில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு மானியம் பள்ளி மாணாக்கருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– லிருந்து ரூ.1400/– ஆகவும் கல்லூரி மாணாக்கருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1100/– லிருந்து ரூ.1500/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கருக்கு ரூ.1.00 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, ஆங்கில பேச்சுதிறமை, திறன் மேம்பாட்டு பயிற்சிகள் சென்னை மாவட்ட விடுதி மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

- விடுதிகளில் மாணக்கர்கள் தங்களது சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், ஆர்வங்களை கண்டறிந்து அதன் வாயிலாக தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும்

சென்னை மாவட்டத்திலுள்ள விடுதிகளில் 1. இசை, இசை தகவல் தொழில்நுட்பம், நாடகம், புகைப்படக்கலை மற்றும் கவின் மன்றம், 2. வாசித்தல் மற்றும் விவாதம் மன்றம், 3. சுற்றுச்சூழல் மன்றம், 4. சதுரங்கம் மற்றும் பிற விளையாட்டு மன்றம் ஆகிய 4 மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மாணாக்கருக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதின் பலனாக, தேசிய கல்வி நிறுவனங்களின் NIT, NEET, NIFT நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று தேசிய கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று வருகின்றனர்.

## 2.2 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்

(i) கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள், ஜமுக்காளம், பாய், போர்வை, உறையுடன் கூடிய தலையணைகள், எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர். மருந்துகள் அடங்கிய

முதலுதவிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள்.

(ii) சமையல் எரிவாயு இணைப்பு, குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள், ஈர அரவை இயந்திரங்கள், நீராவி கொதிகலன்கள், மின்னணு எடை இயந்திரங்கள், மின் அரைப்பான்கள்.

(iii) ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டைத் தகளிகள்.

(iv) நூலக வசதி.

## 2.3 உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், விழா நாட்களுக்கான சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணம் ஆகியவை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன.

| கட்டணங்கள் | பள்ளி விடுதி மாணாக்கர் | கல்லூரி விடுதி மாணாக்கர் |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.1,400/- | ரூ.1,500/- |
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.100/- | ரூ.150/- |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) | ரூ.40/- | ரூ.80/- |

## 2.4 தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே அரசுடன் இணைந்து சேவை செய்து வரும் 16 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 18 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4,432 ஆதி திராவிட மாணாக்கருக்கு, உணவுக் கட்டணம், பல்வகைச்

செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

**(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்**

3,500 மாணாக்கர் பயின்று வரும் தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் இரண்டு விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென, 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.11.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.5 அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

ஆதி திராவிடர் மாணாக்கர் தொழிற்பயிற்சி பயில ஏதுவாக பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரத்தியேகமாக நடத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம் | மாணாக்கரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கடலூர் | சிதம்பரம் | 253 |
| 2. | திருவள்ளூர் | வடகரை | 194 |
| மொத்தம் | | | 447 |

## 3. சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 3.1 புதிய முன்னெடுப்புகள்

#### 3.1.1 அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

நகர மற்றும் ஊரகப்பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2023-24ஆம் நிதியாண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.200.00 கோடி வீதம், 5 ஆண்டுகளில் ரூ.1000.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதிகளில் சாலை வசதி ஏற்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றது. இதில் ரூ.100.00 கோடி ஊரக

வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 1325 பணிகளும், ரூ50.00 கோடி பேரூராட்சி இயக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 336 பணிகளும் மற்றும் ரூ.50.00 கோடி தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 32 திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. 2024–25 ஆம் நிதியாண்டிற்கு ரூ.200.00 கோடி என்பதை ரூ.230.00 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஒதுக்கீட்டின் கீழ் சிறப்பினமாக ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் 120 சமுதாயக் கூடங்கள் கட்டப்படவுள்ளன.

### 3.1.2 சிறந்த படைப்புகள் மொழிபெயர்ப்பு மற்றும் மறுபதிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், கலை, பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களின் தமிழ் படைப்புகள் உலகளவில் வசிக்கும் மக்களை சென்றடைந்திடும் வகையிலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டு சங்கம், தமிழ்நாடு பாடநூல் கழகத்துடன் இணைந்து பின்வரும் ஆறு படைப்புகளை மறு பதிப்பு செய்துள்ளது.

1. Towards a Non-Brahmin Millenium: From Iyothee Thass to Periyar translated by Tmt. V. Geetha and Thiru. S.V. Rajadurai
2. Karukku by Tmt. Bama translated by Lakshmi Holmstrom
3. Dark Interiors: Essays on Caste and Culture by Thiru. Raja Gauthaman translated by Theodore Baskaran
4. Koogai by Thiru. Cho Dharman translated by Vasantha Surya
5. The Scar by Thiru. K. A. Gunasekaran translated by Tmt. V. Kadambari
6. The Grip of Change written and translated by Tmt. P. Sivakami.

மேலும், மேற்கண்ட மறுபதிப்புகளைத் தவிர, அயோத்திதாசரின் சிந்தனைகள், M.C.இராஜா அவர்களின் கட்டுரைகள், இமயம் அவர்களின் செடல், தலித் எழுத்தாளர்களின் சிறுகதைகள் ஆகியவைகள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

### 3.1.3 சமூக நீதி மற்றும் சமத்துவ மையம்

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியத்துடன் சென்னை சமூகப் பள்ளியில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம், அரசாணை (நிலை) எண்.87, நாள் 12.07.2023ன்படி நிறுவப்பட்டது. இந்த மையம் செப்டம்பர் 2023 முதல் சென்னை சமூகப் பள்ளியில் செயல்பட தொடங்கியது. சமூக நீதி மற்றும் சமத்துவத்தை மையமாகக் கொண்டு பொதுக் கொள்கை உருவாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆராய்ச்சி மேற்கொள்வது, பயிற்சிகளை வழங்குவது மற்றும் ஆவணப்படுத்துதல் போன்ற பணிகளை முதன்மையாக கொண்டுள்ளது.
- இந்த மையம் இதுவரை இரண்டு கணக்கெடுப்புகளை/ ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. முதலாவதாக, தமிழ்நாட்டின் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினர் மக்கள் பற்றியதாகும் இரண்டாவதாக, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பூம்பூம் மாட்டுக்காரர் என்ற நாடோடி இனத்தைச் சார்ந்த பழங்குடியினர் பற்றிய

ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது இந்த மையம் பின்வரும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

- தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள பன்னியாண்டி சமூகம் பற்றிய ஆய்வு
- தமிழ்நாட்டில் வன உரிமைகள் சட்டம் 2006–னை செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்கள். அணுகுமுறைகள், செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்புகள் குறித்த ஆய்வு
- தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் தாக்கம் குறித்த ஆய்வு
- 1990 முதல் 2003 வரை தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடருக்கு எதிரான சாதிய வன்கொடுமைகள் பற்றிய ஆய்வு
- கல்வி உரிமைச் சட்டம் 2009ன் செயல்பாடு மற்றும் தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மீதான தாக்கம் பற்றிய ஆய்வு
- ஆதி திராவிடர் தொழில் வர்த்தக துறையின் (DICCI)) பற்றிய குறிப்புடன் ஆதி திராவிடர்

தொழில் முனைவோரின் நிலை குறித்த ஆய்வு

- தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகளை தடுப்பது குறித்து நிபுணர்களின் மாநில அளவிலான ஆலோசனைக் கூட்டத்தை இம்மையம் நடத்தியுள்ளது.
- பழங்குடியினர் பற்றிய **நாடோடிகளின் தாளம்** என்ற ஆவணப்படத்தை உருவாக்கியுள்ளது. சமூக நீதி மற்றும் சமத்துவம் தொடர்பான அனைத்து தரவுகளையும் பயன்படுத்தி தரவு களஞ்சியத்தை உருவாக்கும் பணியில் இம்மையம் ஈடுபட்டுள்ளது.

### 3.1.4 சமத்துவம் காண்போம்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் **"சமத்துவம் காண்போம்"** என்கிற தலைப்பில் 771 காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு

அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் வாயிலாக வழங்கப்பட்டது.

### 3.1.5 புதிரை வண்ணார் மக்கள் தொகை கணக்கெடுப்பு

புதிரை வண்ணார் மக்களின் கல்வி சமூக பொருளாதார நிலை பற்றிய அடிப்படை கணக்கெடுப்பு நடத்தி, அதன் அடிப்படையில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்கும், கல்வியில் மேம்பாடு அடையச் செய்வதற்கும் ஏதுவாக அவர்களின் வாழ்வாதாரம் பற்றிய அறிக்கை மற்றும் அதனை செயல்படுத்துவதற்கான மென்பொருள் உருவாக்கம் செய்து அனைத்து மாவட்டங்களிலும் புதிரை வண்ணார் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

## 3.2 அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் – ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

நகர மற்றும் ஊரகப்பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட "அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற

திட்டத்தின் மூலம், 2023-24ஆம் நிதியாண்டு முதல் வருடந்தோறும் ரூ.200 கோடி மதிப்பீட்டில், 5 ஆண்டுகளில் ரூ.1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேம்படுத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான தொகை ரூ.200 கோடி என்பதை ரூ.230 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஒதுக்கீட்டின் கீழ் சிறப்பினமாக ரூ.100 கோடி மதிப்பீட்டில் 120 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.230.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3 பிரதம மந்திரியின் முன்னோடி திட்டம் (Pradhan Mandri Adarsh Gram Yojana – PMAGY)

மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் சுகாதாரம், கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, சமூகபாதுகாப்பு, கிராமப்புறசாலை மற்றும் வீட்டுவசதி, மின்சாரம்

மற்றும் பசுமை எரிபொருள், விவசாய நடைமுறைகள், நிதி சேர்க்கை, மின்மயமாக்கல், வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு தேவைகளை கண்டறிந்து பூர்த்தி செய்து கிராமங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் 269 கிராமங்கள் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் 203 கிராமங்கள் ஆக மொத்தம் 472 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.97.73 கோடி மதிப்பீட்டில் 1,964 பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் முடிக்கப்பட்டுள்ளன. 2021-2022 ஆம் ஆண்டில் 1,339 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.229.54 கோடி மதிப்பீட்டில் 3,855 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் 1,113 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, 3,162 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023-2024 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.184.23 கோடி நிதி ஒதுக்கீடு

வழங்கப்பட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்ட 2,924 கிராமங்களில், 1,543 கிராமங்கள் ஆதார்ஷ் கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 2024–2025–ஆம் நிதியாண்டிற்கு ரூ.116.79 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 3.4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குதல்

வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவும் மற்றும் நடைமுறையிலுள்ள நில எடுப்பு சட்டங்களின்படியும் நிலம் கையகம் செய்து உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இலவசமாக வீட்டு மனை வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.72,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக 19.01.2024 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

| பகுதி | நிலத்தின் பரப்பளவு | பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு |
|---|---|---|
| கிராமப்புறம் | 3 சென்ட் | ரூ.1,00,000/– |
| நகராட்சி | 1 ½ சென்ட் | |
| மாநகராட்சி | 1 சென்ட் | |

2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ. 6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 8 மாவட்டங்களில் 1007 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் நிதியாண்டில் உயர் இழப்பீட்டுத் தொகைக்கு ரூ.30.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 28 மாவட்டங்களில் 204 வழக்குகளுக்கு உயர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.26.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு செயல்பட்டு வருகிறது.

கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவற்றில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை தனி பணிக்குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வைப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டித்தொகை மூலம் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்களுக்கும், ஆதிதிராவிடர் பிரச்சனைகளைப் பற்றி எழுதும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் அல்லாத 1 எழுத்தாளருக்கும் மற்றும்

பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத 1 எழுத்தாளருக்கும் என மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு தலா ரூ.1,00,000/– அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

**5. டாக்டர் அம்பேத்கர் விருது**

தமிழ்நாடு அரசால் 1998 ஆம் ஆண்டு முதல் 2023–ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் 26 நபர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. தற்போது, இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.5,00,000/–க்கான காசோலை, தகுதியுரை மற்றும் 8 கிராம் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

2023–ஆம் ஆண்டிற்கான **"டாக்டர் அம்பேத்கர் விருது"** திரு.பெ.சண்முகம் அவர்களுக்கு

வழங்கப்பட்டது. இவர் கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் பழங்குடியினர் மக்களின் நலன்களுக்காக பாடுபட்டு வருபவர். குறிப்பாக வாச்சாத்தி கிராம பழங்குடியின மக்களுக்கு நீதியை பெற்றுதந்து, தொடர்ந்து அவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 6. சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை உறுதி செய்து அம்மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை காத்திடும் பொருட்டு மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

<table>
<tr><td>1.</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="2">ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை</td></tr>
<tr><td>2.</td><td>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர்–செயலர்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 3. | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |

## 7. 1955–ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்திட வழி வகுக்கும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016

மற்றும் 2018 ஆகிய சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சட்டங்கள் மாநில அளவில் காவல் நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதை, ஒரு காவல்துறை இயக்குநர், காவல்துறை தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து புகார் அளிக்கவும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான தகவல்கள் குறித்து சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள்

மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்), புதுக்கோட்டை, கடலூர், நாமக்கல், தேனி, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர் செங்கல்பட்டு, திருப்பூர், திருவாரூர், கன்னியாகுமரி (நாகர்கோவில்) மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் 23 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2023–2024–ஆம் நிதியாண்டில், தீருதவித் தொகை, கருணைத் தொகை மற்றும் ஓய்வூதியத்திற்காக ரூ.71.45 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

| உதவிகள் விவரம் | தொகை | பயனாளிகள் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| தீருதவி | 51,33,56,965/- | 3,144 | 1,839 |
| கருணைத் தொகை | 13,76,93,043 | 2,835 | 1,642 |
| பள்ளிக் கட்டணம் | 1,75,495 | 1 | 4 |

| உதவிகள் விவரம் | தொகை | பயனாளிகள் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| அத்தியாவசிய பொருட்கள் | 9,964 | – | 2 |
| வீட்டு மனை பட்டா | 1,65,000 | – | 1 |

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 2022–2023–ஆம் ஆண்டில் 104 நபர்களுக்கும் 2023–2024–ஆம் ஆண்டில் 153 நபர்களுக்கும் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2024–2025ஆம் நிதியாண்டில், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களிடையே தீண்டாமைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24–ஆம் தேதி முதல் 30–ஆம் தேதி வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது.

இவ்விழாவினை நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமத்துவ விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.3.40 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

தமிழ்நாட்டின், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) தீண்டாமையை விட்டொழித்து

பொது மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2023–2024–ஆம் நிதியாண்டில், ரூ.3.70 கோடி செலவில் 37 மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதி ஆண்டில், ரூ.3.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

மயானம் மற்றும் மயானத்திற்கான இணைப்புச் சாலை வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் அதற்கு தேவையான நிலம் கையகப்படுத்தவும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மயானம் மற்றும் மயானப்பாதை அமைக்க தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் இத்திட்டத்தின்கீழ்

தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 31/1978 மூலம் நில ஆர்ஜீதம் செய்யப்படுவதுடன் நேரடி பேச்சுவார்த்தை மூலமும் நில எடுப்பு செய்யப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் மயானத்திற்கு செல்ல சாலை வசதிகள் அமைக்கப்படுகிறது. 2023–2024–ஆம் ஆண்டு முதல் அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மயானத்திற்கு செல்ல சாலை மற்றும் மயானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–2024ஆம் நிதியாண்டிற்கு 60.91 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு மயானம் மற்றும் மயானப்பாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மயானம் மற்றும் மயானப்பாதை வசதி மேற்கொள்ள 60.47 இலட்சம் மதிப்பீட்டில் 4.16 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதி ஆண்டில் ரூ.74.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்**

முன்மாதிரி சிற்றூர்களில் சாதி வேறுபாடுகள் இல்லாமல், வளர்ச்சியை உயர்த்துவதற்கான செயல்பாடுகளுக்கு தலா ரூ.10.00 இலட்சம் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டத்திற்கு மூன்று சிற்றூர்கள் வீதம் (சென்னை நீங்கலாக) 37 மாவட்டங்களில் 2021–2022–ஆம் நிதியாண்டில் 63 சிற்றூர்களுக்கும் 2022–2023–ஆம் நிதியாண்டில் 70 சிற்றூர்களுக்கும் 2023–2024–ஆம் நிதியாண்டில் 66 சிற்றூர்களுக்கும் பரிசுத் தொகையாக ரூ.19.9 கோடி வழங்கப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் நிதியாண்டில் 66 சிற்றூர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளன.

இத்திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. ஈமச்சடங்கு உதவித்தொகை

குடும்பங்களில் நடக்கும் எதிர்பாரா துக்க நிகழ்வுகளுக்கான ஈமச்சடங்கு செலவுகளை மேற்கொள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.5,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.9.95 கோடி மதிப்பிலான உதவித்தொகை 20,105 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## II. பழங்குடியினர் நலன்

பழங்குடியின மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான தேவைகளை அறிந்து அதற்கான திட்டங்களை உருவாக்கவும் அதனை செயல்படுத்தவும் 2000 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பழங்குடியினர் நல இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டு, 2018 முதல் தனித்துறையாக முழு நிதி, நிர்வாக அதிகாரத்துடன் இயங்கி வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 2023–ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட நரிக்குறவர்கள் உட்பட 37 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 8,41,558 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு ஆகும்.

இத்துறை பழங்குடியின மக்களின் பண்பாட்டினை பாதுகாத்தல், கல்வி உட்கட்டமைப்பு உருவாக்குதல் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்குதல், வாழ்வாதார மேம்பாட்டினை உயர்த்துவதற்கு தேவையான நலத்திட்ட உதவிகள்

மற்றும் அடிப்படை வசதிகளை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**1. கல்வி**

கல்வியின் மூலமே எதிர்கால தலைமுறைகளின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கை தரத்தையும் உயர்த்த முடியும் என்பதனைக் கருத்திற்கொண்டு கல்விக்கான நலத்திட்டங்கள் மற்றும் உதவித்தொகைகள் இத்துறையால் மிகுந்த கவனத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

பழங்குடியினர் நலத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 43.23 விழுக்காடு கல்விக்காக செலவிடப்படுகிறது.

**2023–24 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய முன்னெடுப்புகள்**

- பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி பள்ளிகளில் பயின்ற மாணக்கர்கள் JEE நுழைவுத் தேர்வில் 37 மாணவர்களும் CLAT நுழைவுத் தேர்வில் 15 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும், NIFTEE நுழைவுத்

தேர்வில் 9 மாணவர்களும் NEET நுழைவுத் தேர்வில் ஒருவரும் தேர்ச்சி பெற்று மேன்மை பெற்ற (Centre of Excellence) உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வு பெற்றுள்ளனர். மேலும், 67 மாணவர்களுக்கு CUET நுழைவுத்தேர்விற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- நடப்பாண்டிலும் JEE, CLAT, NIFTEE, NEET, CUET ஆகிய நுழைவுத் தேர்வுகளை பழங்குடியின மாணவர்கள் எளிதில் அணுக ஏதுவாக 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கு உயர்கல்வி பயில்வதற்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்க "தொட்டு விடும் தூரத்தில் இலக்கு" சிறப்பு பயிலரங்கம் சேலம் மாவட்டத்தில் நடத்தப்பெற்றது.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியின் செயல்பாட்டினை ஊக்குவிக்கும் விதமாக 2022-2023 ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத் தேர்வில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்றதோடு, பன்னிரெண்டாம் வகுப்பு

பயின்ற 88% மாணாக்கர் உயர் கல்வியைத் தொடர சிறப்பாகச் செயல்பட்ட திருச்சி மாவட்டம், டாப்செங்காட்டுப்பட்டி, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி 2023-2024 ஆம் ஆண்டின் சிறந்த மேல்நிலைப்பள்ளியாக தேர்வு செய்யப்பட்டு பரிசுத் தொகையாக ரூ.5.00 இலட்சம் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 2023-24ஆம் ஆண்டு அதிகப்படியான மாணாக்கர் எண்ணிக்கை கொண்ட பள்ளி என்ற சிறப்பினையும் இப்பள்ளி பெற்றுள்ளது.

- பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு ஆசிரியர்கள் மூலம் மாலை நேர சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன.

- 2023-24 ஆம் கல்வியாண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட பள்ளிகளில் பயிலும் 5 மாணவர்கள் இமாச்சல பிரதேசத்தில்

உள்ள அடல்பிகாரி வாஜ்பாய் நிறுவனத்தில் மலையேற்றம் மற்றும் துணை விளையாட்டுகளுக்கான 26 நாட்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

- 2022-23ஆம் கல்வியாண்டில் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை பெற்ற 20 பழங்குடியின மாணாக்கர் மற்றும் 2 கவனிப்பாளர்கள் புதுடில்லியில் 26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் இந்திய குடியரசு தலைவரின் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

- ஒடிசா மாநிலம் புவனேஸ்வரம் நகரில் நடைபெற்ற Khelo India Rural and Indigenous National Games 2023 (KIRING) விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக 72 பழங்குடியின மாணாக்கர் கலந்து கொண்டு, 12 மாணவர்கள் (ஆண்கள்) குழு கபடி விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், கைப்பந்து (Volley Ball) போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்றனர். மேற்கண்ட நிகழ்விற்காக

ரூ.8.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ஒன்றிய அரசின் நிதிப்பங்களிப்புடன் 7 மாவட்டங்களில் செயல்படும் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு கல்வி பயிற்றுவிப்பதை எளிதாக்கும் பொருட்டு 2023-24 ஆம் கல்வியாண்டில் நவீன முறை வகுப்பறைகள் (Smart Class Rooms) ரூ.41.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உயர்கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- பழங்குடியினர் விடுதிகளில் மாணாக்கரின் நலனைக் கருத்தில் கொண்டு கண்காணிப்புக் கேமரா (CCTV Camera), தொடுதிரை சாதனம் பொருத்துதல் (Bio Metric Devices), மைய கண்காணிப்பு பலகைக்கான (Central Monitoring Dashboard) மென்பொருள் ஆகிய பணிகள் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மேற்காணும் புதிய முன்னெடுப்புகளின் விளைவாக 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் பழங்குடியின பள்ளிகள் தேர்ச்சி விகிதத்தில் முதலிடம் பெற்றன.
- 2023–2024–ஆம் ஆண்டில், 81 செவிலியர் பயிற்சி பட்டயபடிப்பு பயிலும் மாணவியர்களுக்கு தலா ரூ.70,000/– விகிதத்தில் ரூ.56.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 1.1 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்

பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் அவர்களுடைய கலாச்சார பராம்பரியத்தைப் பின்பற்றி கல்வி அறிவு விகிதத்தினை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் குடியிருப்புகளுக்கு அருகில் உணவு மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

## அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2023–2024)

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 212 | 4,635 | 4,437 | 9,072 |
| நடுநிலைப் பள்ளிகள் | 49 | 2,110 | 1,992 | 4,102 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 31 | 2,080 | 1,569 | 3,649 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 28 | 4,475 | 4,039 | 8,514 |
| **மொத்தம்** | **320** | **13,300** | **12,037** | **25,337** |

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 84.06 % லிருந்து 2023 – 24 ஆம் கல்வியாண்டில் 90.63% ஆக உயர்ந்துள்ளது. அதைப்போலவே 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 94.05 % லிருந்து 2023–24–ஆம் கல்வியாண்டில் 94.71 % ஆக உயர்ந்துள்ளது.

## 1.2 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி முறையில் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டம் | இடம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | வெள்ளிமலை | 316 | – | 316 |
| 2 | சேலம் | அபிநவம் | – | 475 | 475 |
| 3 | நீலகிரி | மு.பாலாடா | 132 | 68 | 200 |
| 4 | நாமக்கல் | செங்கரை | 254 | 112 | 366 |
| 5 | திருவண்ணா–மலை | புளியம்பட்டி | 190 | 157 | 347 |
| 6 | திருப்பத்தூர் | கீழுர் | 157 | 106 | 263 |
| 7 | செங்கல்பட்டு | குமிழி | 108 | 57 | 165 |
| 8 | சேலம் | ஏற்காடு | 153 | 84 | 237 |
| **மொத்தம்** | | | 1,310 | 1,059 | 2,369 |

இப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு தேர்ச்சி விகிதம் 94.25 % மற்றும்

12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 96.49 % ஆகும்.

2023–24–ஆம் கல்வியாண்டில் இத்துறைப் பள்ளிகளில் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 14 பள்ளிகளும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 28 பள்ளிகளும் 100% தேர்ச்சி அடைந்துள்ளன.

**2. கல்வி உதவித் தொகை**

பழங்குடியின குழந்தைகளை அவர்தம் பெற்றோர் பள்ளிக்கு தொடர்ந்து அனுப்பவும், பள்ளி இடைநிற்றலைத் தடுக்கவும், அவர்களின் நிதிச்சுமையைக் குறைக்கவும், பள்ளிக் கல்வியை முடித்து உயர்கல்வியில் மாணாக்கர் சேருவதை ஊக்கப்படுத்தவும் கீழ்காணும் கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.1 பெண் கல்வி ஊக்கத்தொகை திட்டம்**

அனைத்து பெண் குழந்தைகள் பள்ளி செல்வதை உறுதிப்படுத்தவும், இடைநிற்றலைத் தவிர்க்கவும், 3 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும்

மாணவியருக்கு கீழ்க்கண்டுள்ளவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | வகுப்பு | ஊக்கத்தொகை (ரூ.) (ஆண்டொன்றுக்கு) |
|---|---|---|
| 1 | 3 முதல் 5 வரை | 500/- |
| 2 | 6 | 1000/- |
| 3 | 7 மற்றும் 8 | 1500/- |

2023-2024 ஆம் ஆண்டு முதல் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பிலிருந்து (EMIS) பெறப்பட்ட தரவுகள் TNeGA மூலம் சரிபார்க்கப்பட்டு ஆதார் எண்ணின் அடிப்படையில் மாணவியர்களின் வங்கி கணக்கிற்கு தொகை நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக, 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.2 ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும்

பழங்குடியின மாணாக்கருக்கு ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இவ்வுதவித்தொகை, மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் பின்வருமாறு செலுத்தப்படுகிறது.

| விவரம் | விடுதி மாணாக்கர் (Hostellers) | விடுதியில் தங்காத மாணாக்கர் (Days Scholars) |
|---|---|---|
| | (ரூபாயில்–ஓர் ஆண்டிற்கு) | |
| பராமரிப்புப் படி | 5,250/– | 2,250/– |
| தனி மானியம் | 1,000/– | 750/– |

2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.5.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3 போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள 11–ஆம் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை படிக்கும் பழங்குடியின மாணாக்கர் இக்கல்வித் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள்.

**அ. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கருக்கான உதவித்தொகை திட்டம்**

10–ம் வகுப்புக்கு மேல் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரின் கட்டாய, திரும்பப் பெறாக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப் படி நேரடியாக கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

**ஆ. சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் பயிலும் மாணக்கருக்கான உதவித்தொகை திட்டம்**

பழங்குடியின மாணாக்கர் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயில்வதற்கான கல்விக் கட்டணம் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் வங்கிக் கணக்கிலும், பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கிலும் நேரடியாக மாநில அரசால் செலுத்தப்படுகின்றன.

## இ. பராமரிப்புப்படி (Maintenance Allowance) விவரம்

போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் பராமரிப்புப்படி குறித்த விவரம் பின்வருமாறு

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | விடுதி தங்கா மாணாக்கர் (Days Scholar) |
| I | இளநிலை/முதுகலை தொழிற்படிப்புகள், முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes), பல்வேறு துறைசார்ந்த தொழில் நுட்ப முதுகலை பட்டயப்படிப்பு | 1,200/– | 550/– |
| II | தொழில் நுட்ப கல்வி அல்லாத இளங்கலை, முதுகலை, பட்டப்படிப்பு, தொகுதி–1ல் இடம்பெறாத கலை , அறிவியல் மற்றும் வணிகவியல் பட்டப்படிப்பு (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc., ) | 820/– | 530/– |
| III | தொழில் நுட்பப்படிப்புகள், தொழிற்பயிற்சிக் கல்வி/ மூன்றாண்டு பாலிடெக்னிக் பட்டயப்படிப்புகள் | 570/– | 300/– |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | விடுதி தங்கா மாணாக்கர் (Days Scholar) |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட போஸ்ட் மெட்ரிக் (XI, XII,) மாணாக்கர் | 380/– | 230/– |

2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.4 உயர் கல்விக்கான இதர கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கர் உயர்கல்வி படிப்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:–

- அரசு தேர்வுகளுக்கான தேர்வுக் கட்டணத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு ஈடு செய்தல்.
- கற்பிப்புக் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஈடு செய்தல்.

- இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- உயர் கல்விச் சிறப்பு படிப்பு உதவித் தொகை.

### 3. பழங்குடியினர் நல விடுதிகள்

தொலைதூரப் பகுதியிலிருந்து, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலிருந்து பயிலும் பழங்குடியின மாணவர்கள் தங்கி கல்வி பயில்வதற்கான சூழ்நிலையை உருவாக்கி, தங்குமிடம், உணவு, படிப்பு வசதிக்கான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### புதிய விடுதிகள்

தருமபுரி, நாமக்கல் மற்றும் திருப்பத்தூர் ஆகிய 3 மாவட்டங்களில், 50 பழங்குடியின மாணவியர் தங்கிப்பயிலும் வகையில் 3 அரசு கல்லூரி விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2023-2024)

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பள்ளி விடுதிகள் | 40 | 1025 | 905 | 1930 |
| கல்லூரி விடுதிகள் | 5 | - | 264 | 264 |
| தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள் | 6 | 358 | - | 358 |
| **மொத்தம்** | **51** | **1,383** | **1,169** | **2,552** |

- ஜனவரி 24, 2024 முதல் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்/ பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கான மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு தலா **ரூ.1,400/-**ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு தலா **ரூ.1,500/-**ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- மலைப்பாங்கான இடங்களில் அமைந்துள்ள பழங்குடியினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு சூரிய ஒளி மின்விளக்கு (Solar Light), கம்பளி ஆடை (Sweater) மற்றும் மழை அங்கி (Rain coat) ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 4. தொழிற்பயிற்சி நிலையங்கள்

பழங்குடியின மாணாக்கர் உற்பத்தித் துறைகளில், உள்நாட்டிலும், அயல்நாட்டிலும் வேலைவாய்ப்பைப் பெறவும், சுயவேலைவாய்ப்பைத் தொடங்கவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையுடன் இணைந்து பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் விடுதி வசதியுடன் இயங்கி வருகின்றன.

இப்பயிற்சி நிறுவனங்களில் தையல் தொழில்பயிற்சி, மின்னியல் வல்லுநர், பொருத்துநர், குழாய் செப்பனிடுபவர், கம்பி பற்றவைப்பவர், அதிநவீன CNC இயந்திர நிபுணர், தொழில்துறை எந்திரவியல், டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர், மின்வாகன பழுதுபார்ப்பவர் உள்ளிட்ட 14 வகையான தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில், மின்னியல் வல்லுநர், குழாய் செப்பனிடுபவர், கம்பி பற்றவைப்பவர், அதிநவீன CNC இயந்திர நிபுணர், தொழில்துறை எந்திரவியல், டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர், மின்வாகன பழுதுபார்ப்பவர் போன்ற பயிற்சி

படிப்புகளில் 100க்கும் மேற்பட்ட மாணாக்கர் பயின்று வருகின்றனர். 2023–2024–ஆண்டில் 1150 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகளின் செயல்பாட்டிற்காக 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.8.28 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் நிருவாகச் செயல்பாட்டிற்காக ரூ.9.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி**

**(i) விடுதியுடன் கூடிய பள்ளி**

Society For Rural Development (SFRD) என்ற தொண்டு நிறுவனத்தால் திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் பழங்குடியின மாணாக்கருக்காக மேல்நிலைப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. அப்பள்ளியில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் 2,027 மாணாக்கரின்

நலன் கருதி, பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் மாநில நிதியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கான உணவுக் கட்டணம், சில்லரைச் செலவினம் மற்றும் இதர சலுகைகள் 2005–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளி மாணவர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் ஆண்டுதோறும் 100% தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.3.50 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2024–2025–ஆம்நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.3.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள்**

அரசு மட்டுமின்றி தனியார் தொண்டு நிறுவனங்களாலும் பழங்குடியின மாணாக்கருக்கான விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் – Aim for Seva மற்றும் விருதுநகர் மாவட்டம் – ராம்கோ & குரூப் ஆகிய தொண்டு

நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 100 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மற்றும் இதர சலுகைகள் அரசுப் பள்ளி மாணாக்கருக்கு இணையாக வழங்கப்படுகின்றன.

**(iii) அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி / விடுதிகளுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்**

பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் பள்ளிகள் தொடங்கிட முன்வரும் அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம் ஏற்காடு மான்ட்போர்டு சமுதாய பள்ளி மற்றும் கள்ளக்குறிச்சி சமுதாய சேவை மையம் ஆகிய தொண்டு நிறுவனங்களால் பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.4.45 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மான்ட்போர்டு சமுதாயப் பள்ளியின் மூலம் 1352 மாணாக்கரும், சமுதாய சேவை மையம் மூலம் 641 மாணாக்கரும் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென, **2024-2025-ஆம்** நிதியாண்டில் **ரூ.14.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. மாநில அரசுத்திட்டங்கள்

### 6.1 2023-2024-ஆம் நிதியாண்டின் புதிய முன்னெடுப்புகள்

- **"தொல்குடியினர் வேளாண்மை மேலாண்மைத் திட்டம் - ஐந்திணை"** தொடக்க விழா 06.03.2024 அன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்றது. 6 அரசு நிறுவனங்கள் மற்றும் 4 அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டங்களை 3 ஆண்டுகளில் ரூ. 15.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு 2023-24 ஆம் ஆண்டில் ரூ.5.59 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- 2023-2024 ஆம் நிதியாண்டில் 20 மாவட்டங்களில் ரூ.79.00 கோடி செலவில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 500

நரிக்குறவர் மற்றும் 1000 இதர பழங்குடியினர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 1,500 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

- நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பெரப்பன்சோலை மற்றும் எடப்புளிநாடு கிராமங்களில் உள்ள பூர்வமலை பழங்குடியினர் மலையாளி விவசாய மேம்பாட்டு சங்கம், திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், பச்சமலையில் உள்ள மலையரசி விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டி பூர்வமலை பழங்குடியினர் மலையாளி விவசாய மேம்பாட்டு சங்கம் ஆகியவற்றிற்கு ரூ.104.73 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண்மை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மின்இணைப்பு வழங்க இயலாத வனக் கிராமங்களில் விளையும் தினை, வரகு மற்றும் சாமை போன்ற

சிறுதானியங்களை அரைப்பதற்கு சூரிய ஆற்றலில் இயங்கும் 10 சோலார் அரைவை இயந்திரம் ரூ.29.85 இலட்சம் செலவில் வழங்கி பழங்குடியினரின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ஈரோடு மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினர் மக்கள் அதிகம் வாழும் தொலைதொடர்பு வசதி இல்லாத 78 கிராமங்களில் நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு [Long Range Wireless connectivity] வசதிகள் ரூ.622.02 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வசதியினைப் பயன்படுத்தி தொலை மருத்துவம் (Tele Medicine), தொலைதூரக் கல்வி (Tele Education), தொலைதூர கலந்தாய்வு (Tele Counselling) போன்ற செயல்பாடுகளுக்கு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரிவுகளில் பெங்களூரு, Nettur Technical Training Foundation (NTTF) நிறுவனம்

மூலம் ரூ.81.12 இலட்சம் மதிப்பீட்டில் 2 மாத திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு 148 வேலைதேடும் நபர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்று வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை சமூகப்பணி பள்ளி (Madras School of Social Work) மூலம் தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் பற்றிய சமூக பொருளாதாரக் கணக்கெடுப்பு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் (PVTGs) இனத்தைச் சார்ந்த 86 நபர்களும் 9 தொடர்பு அலுவலர்களும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் சிறப்பு விருந்தினர்களாக புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

## 6.1 விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, கலாச்சார பாதுகாப்பு மற்றும் சட்ட

உரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்தி பழங்குடியின மக்களின் தேவைகளை நிறைவு செய்வதே விரிவான பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் நோக்கமாகும்.

2023-24ஆம் நிதியாண்டில் வருவாய் இனத்தில் ரூ.19.64 கோடியும் மூலதனச் செலவினத்தில் ரூ.73.87 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

### 6.2 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (Integrated Tribal Development Programme)

சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள வருவாய் வட்டார அளவில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் 10 மலைப்பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பழங்குடியினருக்கான திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஏழு திட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு

அவர்களின் கண்காணிப்பில் பல்வேறு நலத்திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள்**

| வ. எண். | மாவட்டம் | திட்டப்பகுதிகள் |
|---|---|---|
| 1. | சேலம் | ஏற்காடு, பச்சைமலை, அருநூத்துமலை மற்றும் கல்வராயன்மலை |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை |
| 4. | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 5. | திருச்சிராப்பள்ளி | பச்சமலை |
| 6. | தருமபுரி | சித்தேரிமலை |
| 7. | திருப்பத்தூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

இத்திட்டத்தின்கீழ் 2023-2024-ஆம் ஆண்டில் ரூ.3.48 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.3 பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்

பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அவர்களது வாழ்வியல் சூழலை முழுமை அடையச் செய்வதன் பொருட்டு சுகாதாரமான குடிநீர், மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள், நவீன சூரிய மின்விளக்கு, தெருவிளக்குகள், நவீன கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழங்குடியினர் நலத்துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆகிய துறைகள் மூலம் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- 2023-2024 ஆம் நிதியாண்டில் அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் சாலைவசதி, குடிநீர் வசதி, கால்வாய் வசதி, சுற்றுச்சுவர் மற்றும் சூரியஒளி விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் தாட்கோ, வனத்துறை மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் /

மாவட்ட திட்ட அலுவலர்கள் மூலம் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2023-2024 ஆம் நிதியாண்டில் சிறப்பு அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ், 40 பழங்குடியினர் கிராமங்கள் கண்டறியப்பட்டு சாலைவசதி, குடிநீர் வசதி, கால்வாய் வசதி, சுற்றுச்சுவர் மற்றும் சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024- ஆம் நிதியாண்டில் ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 தொல்குடி - சிறப்பு திட்டம்

2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், வாழ்வாதாரத்திற்கான பல்வேறு சிறப்பு திட்டங்களின் மூலம் பழங்குடியினரின் வாழ்க்கை

தரத்தினை உயர்த்திடவும் **"தொல்குடி"** என்ற சிறப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஆண்டிற்கு ரூ.250.00 கோடி வீதம் 4 ஆண்டுகளில் ரூ.1,000.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

2024-25 ஆம் நிதியாண்டிற்கு ரூ.250.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. ஒன்றிய அரசுத் திட்டங்கள்**

**7.1 பிரதம மந்திரியின் பழங்குடியினர் முன் மாதிரி கிராமத்திட்டம் (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)**

மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காடு அல்லது 500-க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்களின் அடிப்படை உட்கட்டமைப்புத் தேவைகளை 5 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்திட (2021-2022 முதல் 2025-2026 வரை) இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட 167 கிராமங்களின் அடிப்படை வசதிகளின் தேவையினைக் கணக்கிட்டு, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூ.20.38 இலட்சம்

நிதியிலிருந்தும், பிற துறைகளிலிருந்து கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டி "இடை நிரப்புதல்" (Gap Filling) முறைப்படி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2023–2024–ஆம் நிதி ஆண்டில் ரூ.10.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.12.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.2 இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275 (1)–ன் கீழ் நிதியுதவி திட்டம்**

கல்வி, சுகாதாரம், குடிநீர், சாலை வசதிகள், இணையதள சேவை மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசானது ரூ.7.35 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.6.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7.3 அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

பழங்குடியினர் மக்கள் தொகை வளர்ச்சியில் தேக்கம் அல்லது குறைவு, முழுமையாக வேளாண்மை சார்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த கல்வியறிவு போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோடர், கோத்தர், இருளர், குரும்பர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகிய ஆறு இனத்தவர்கள் "அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினர்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மக்களின் வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, சூரிய உயர் மின் கோபுர விளக்கு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாசாரப் பாதுகாப்பு போன்ற கூறுகளில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் குறித்து ரூ.48.00 இலட்சம் செலவில் ஆய்வு செய்யப்பட்டு அவர்களது

கலாச்சாரங்கள் ஒலி / ஒளி ஆவணங்களாகப் பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 7.4 பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM JANMAN)

ஒன்றிய அரசின் **PM–JANMAN** திட்டம் 9 இணைத்துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்–படுகிறது. பழங்குடியினர் நலத் துறை மூலம் பன்னோக்கு மையம் **(Multi Purpose Centre–MPC)** மற்றும் வன வள மையம் **(Van Dhan Vikas Kendra–VDVK)** ஆகியவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 25 பன்னோக்கு மையங்களுக்கு ரூ.15.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.5.19 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினர்களுக்கென சிறப்பினமாக அரியலூர், நாமக்கல், திருப்பத்தூர், திருவண்ணாமலை, நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 7 மாவட்டங்களில் 37 வன வள மையங்கள் தொடங்கிட ரூ.120.15 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் ரூ.60.08 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டது.

| வ. எண் | செயல்பாடுகள் | மாநில அரசு துறைகள் | நிதிப் பங்கீடு | எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கோடியில் |
|---|---|---|---|---|---|
| 1 | வீடுகள் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை | 60:40 | 2094 ஓரலகின் விலை 2,00,000 | 41.88 |
| 2 | இணைப்புச் சாலைகள் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை | 60:40 | 8 | 15.95 |
| 3 | குழாய் நீர் வழங்குதல் மற்றும் பொது குடிநீர் வழங்குதல் (Jal Jeevan Mission) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) | 50: 50 | பயன் பெறும் குடியிருப்புகளின் எண்ணிக்கை : 1417 | 25.23 |
| | | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (கோயம்புத்தூர் மாவட்டம்) | 50:50 | CWSS : 2 பயன் பெறும் குடியிருப்புகளின் எண்ணிக்கை : 223 | 11.78 |
| 4 | வீடுகளுக்கு மின் இணைப்பு | எரிசக்தி துறை | 100 | 7094 ஓரலகின் விலை 31048 | 22.37 |
| 5 | விடுதிகள் கட்டுமானம் | பள்ளிக் கல்வித்துறை | 60:40 | | 12.32 |
| 6 | அங்கன்வாடி மையங்கள் கட்டுமானம் | சமூக நலத் துறை | 100 | 16 ஓரலகின் விலை 12,00,000 | 1.2 |
| 7 | சமுதாய நலக் கூடங்கள் கட்டுமானம் | பழங்குடியினர் நலத் துறை | 100 | 25 ஓரலகின் விலை 60,00,000 | 5.19 |

| வ. எண் | செயல்பாடுகள் | மாநில அரசு துறைகள் | நிதிப் பங்கீடு | எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கோடியில் |
|---|---|---|---|---|---|
| 8 | வன வள மையங்கள் ஏற்படுத்துதல் | பழங்குடியினர் நலத் துறை | 100 | 35 ஓரலகின் விலை 5000 2296 பயனாளிகள் | 1.14 |

## 7.5 சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத்திட்டம்

வனங்களைச் சார்ந்து வாழும் பெரும்பாலான பழங்குடியின மக்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காக காடுகளில் விளையும் சிறு வனப் பொருட்களையே சார்ந்துள்ளனர்.

மூங்கில், தேன், மெழுகு, அரக்கு, மூலிகைகள், கிழங்குகள் போன்ற பல வகையான பொருட்கள் சிறுவனப் பொருட்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தேன், கடுக்காய், புளி, மலை துடைப்பம் ஆகிய பொருட்களுக்கு ஒன்றிய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவித்துள்ளது.

இத்தகைய சிறு வன பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், மதிப்புக் கூட்டவும், சந்தைப்படுத்துதல் வாய்ப்புகளை உருவாக்கவும், "சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச

ஆதார விலை" என்ற திட்டம் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு (TRIFED) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**7.6 வனவள மையம் (VDVK)**

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதியில் 20 உறுப்பினர்களைக் கொண்ட 15 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு (300 உறுப்பினர்கள்) வனவள மையம் உருவாக்கப்பட்டு ரூ.15.00 இலட்சம் 100% மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை இயந்திரங்கள் வாங்குதல், பயிற்சி அளித்தல், சிறுவனப் பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றிற்காக செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பின்வரும் 4 மாவட்டங்களில் 8 வன வள மையங்கள் செயல்பாட்டில் உள்ளன.

| **வ. எண்.** | **மாவட்டம்** | **வனவள மைய அமைவிடம்** |
|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை (3) |
| 2 | சேலம் | ஏற்காடு, கருமந்துறை, அருநூத்துமலை |

| வ. எண். | மாவட்டம் | வனவள மைய அமைவிடம் |
|---|---|---|
| 3 | திருப்பத்தூர் | புதூர்நாடு |
| 4 | வேலூர் | பீஞ்சமந்தை |

## 8. பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006

வாழ்வாதாரம், குடியிருப்பு, சமூக கலாசாரம் மற்றும் இதர தேவைகளுக்காக வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வாழ்பவர்களின் வனம் சார்ந்த உரிமையினைச் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கும் பொருட்டு "பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006–இல் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 13.12.2005–ஆம் நாளுக்கு முன்பு வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களைச் சார்ந்து சுற்றுப்புறங்களில் வாழும் பழங்குடியினரும் இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக (75 ஆண்டுகளாக) வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் இதர மரபினரும்

வன உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம் 2006–இன்கீழ் தனிநபர் வனநில பயன்பாடு, வன வளப் பொருட்களைச் சேகரித்தல் மற்றும் விற்பனை செய்தல், மேய்ச்சல் நிலப்பயன்பாடு, வன நிலங்களை சாலை, பள்ளி, மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளுக்கு பின்வரும் வன உரிமைகள் வழங்கப்படுகின்றன.

1. தனிநபர் உரிமை
2. சமுதாய உரிமை
3. சமுதாய வன வள உரிமை
4. சமுதாய மேம்பாட்டு உரிமை
5. அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கான குடியிருப்பு உரிமை **(Habitat Right)**

இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்து உரிமைகள் வழங்க கிராம சபை, துணைக் கோட்ட அளவிலான

குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு ஆகிய மூன்று குழுக்கள் செயல்படுகின்றன.

தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான கண்காணிப்புக் குழு இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்கிறது.

2023-2024-ஆம் ஆண்டில் வன உரிமைச் சட்டம் சமுதாய உரிமையின்கீழ் திருப்பூர் மாவட்டத்தில், திருமலை மூர்த்தி மலை முதல் குருத்து மலை வரையிலான 3.150 கி.மீ நீளமுள்ள சாலை அமைக்கும் பணிகள் ரூ.49.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு புவியியல் தகவல் மையத்திடம் கிராமப் பஞ்சாயத்து எல்லைகள், வருவாய் கிராம எல்லைகள், தீர்வு எல்லைகள், காப்புக்காடுகள் போன்ற விவரங்கள் பெறப்பட்டு வன உரிமைச் சட்டத்தின்கீழ் பயனடையும் கிராமங்களின் வரைபடங்கள் (FRA Atlas) தயாரிக்கும் பணிகளும், வன உரிமைச் சட்டத்தின்கீழ் தனிநபர் உரிமை (Entitlement) மற்றும் சமூக வன உரிமை வகைப்பாட்டின்கீழ் உரிமைப் பெற்ற பழங்குடியினர் விவரங்களை எண்ம

முறைப்படுத்தும் (Digitalization of FRA Records) பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இச்சட்டத்தின்கீழ் இதுவரை 15,408 தனிநபர்களுக்கு 8,945.51 எக்டேர் நில உரிமையும், 720 பல்வேறு வகை சமூக உரிமைகளின்கீழ் 24,470.85 எக்டேர் உரிமையும் வழங்கப்பட்டுள்ளன.

### 9. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

11.11.1989ஆம் ஆண்டு முதல் பழங்குடியினருக்கான சாதிச்சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்க மாநில அளவில் கீழ்க்காணும் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்கள்

| | |
|---|---|
| அரசு செயலாளர் / கூடுதல் செயலாளர்/ இணைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. | தலைவர் |
| பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் / துணை வனப் பாதுகாவலர் | உறுப்பினர்– செயலர் |
| இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் |

**கண்காணிப்புப் பிரிவுகள்**

பழங்குடியினர் சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மை பற்றி கள ஆய்வு செய்து மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்க துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் சென்னை, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

காவல்துறை தலைவரின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவும் பழங்குடியினர்

சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்கின்றன.

## 10. பழங்குடியினர் ஆய்வு மையம்

தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 1983–84ஆம் நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தில் மு.பாலாடா என்ற இடத்தில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டது. இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் ஆய்வு மையம் பழங்குடியினர் தொடர்பான பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.**

- பழங்குடியினர் சமூகங்கள் பற்றிய ஆராய்ச்சி ஆய்வுகளை நடத்துதல்.

- பட்டியலிடப்பட்ட பழங்குடியினரிடையே சமூக, பொருளாதார, மத, அரசியல் மற்றும் உளவியல் மாற்றங்களைப் பதிவு செய்தல்.
- பழங்குடியின சமூகங்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரம் குறித்த மோனோகிராஃப்களை வெளியிடுதல்.
- பழங்குடியினரின் மொழியைப் பற்றி ஆராய்ந்து, நம்பிக்கையுடன் இருக்க அவர்களுக்குக் கற்பித்தல்.
- பலவீனமான சமூகங்களை தமிழ்நாட்டின் SC/ST பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்தல்.
- பழங்குடியினரின் அடிப்படைத் தேவைகளைப் பற்றி ஆராய்தல்.
- பழங்குடி கலாச்சாரங்கள் மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சி மற்றும் சரியான நோக்குநிலையை வழங்குதல்.
- பழங்குடியினரின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க பழங்குடியினர் அருங்காட்சியகம் நிறுவுதல்.
- பழங்குடியினரின் மேம்பாட்டிற்கான முன்னோக்கு திட்டங்களை தயார் செய்தல்.

- தமிழ்நாட்டின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் குறித்த கால ஆய்வுகளை மேற்கொள்வது
- அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்துதல்.
- பழங்குடியினர் பகுதிகளில் உள்ள அமைப்புகள், பழங்குடியினர் மேம்பாட்டுப் பிரச்சனைகள் பற்றிய கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

இம்மையத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.40.51 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.55.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்**

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், பழங்குடியின இளைஞர்கள் தமது வேலையினைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.33.63 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக ரூ.40.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மக்கள் சேவையினை வெற்றிகரமாக செயலாற்றி 50வது ஆண்டு பொன்விழாவினை கொண்டாடியுள்ளது. ஆதிதிராவிட மக்களுக்கு, தனி குடியிருப்பு வீடுகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிகள், விடுதிகள் ஆகியவை கட்டுவதற்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவங்கப்பட்டது. மக்களின் பொருளாதாரத்தினை மேம்பாடு அடையச் செய்யும் வகையில் பலதரப்பட்ட தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை செயல்படுத்தி வருகிறது.

**தாட்கோவின் செயல்பாடுகள்**

1. பொருளாதார முன்னேற்ற திட்டங்கள்
2. இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 1980–ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசால் 51 விழுக்காடும், ஒன்றிய அரசால் 49 விழுக்காடும் என்கின்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.200.00 கோடியும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.147.11 கோடியும் உள்ளது.

**1. பொருளாதார முன்னேற்ற திட்டங்கள்**

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த, பல தொழில் முனைவோர் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் திட்டங்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடனும், தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC), மற்றும் தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக்கழகம்

(NSTFDC) மற்றும் தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகங்கள் (NSKFDC) மூலம் பெறப்படும் கடன் உதவி வாயிலாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 1.1 2023–24ம் நிதியாண்டிற்கான புதிய முன்னெடுப்புகள்

- **முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் (CM ARISE)**

தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் (மருத்துவம்), நிலம் மேம்பாட்டுத்திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தனிநபர் திட்ட மதிப்பீட்டில் 35 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக

ரூ.3.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை முன்விடுவிப்பு மானியமாக வழங்கப்படுகிறது.

மேலும் வங்கியில் கடன் தவணை தொகையினை தவறாமல், திரும்ப செலுத்தும் பயனாளிகளுக்கு 6% வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

- **வருவாய் ஈட்டும் தொழில்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி**

பல்பொருள் அங்காடி, எழுதுபொருள் விற்பனை அங்காடி, உடற்பயிற்சிக் கூடம், அழகு நிலையம், வெதுப்பகம், தையலகம், மின்சாதனங்கள் விற்பனை, உணவகம், வாகன உதிரி பாகங்கள் விற்பனை, செல்லிடைபேசி பராமரிப்பு, துணிக்கடை அமைத்தல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் விற்பனை, ஆவின் பாலகம் அமைத்தல், தமிழ்நாடு சிமெண்ட் விற்பனை முகவராகுதல், இலகுரக, கனரக வாகனங்கள்மற்றும் மகிழுந்து வாகனம் வாங்குதல் போன்ற வருவாய் ஈட்டும் தொழில்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 2058 பயனாளிகளுக்கு ரூ.39.75 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- **2024–ஆம் ஆண்டு தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்**

தமிழ்நாட்டில் முதல்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் **"TN– BEAT EXPO 2024"** ஜனவரி 26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

இக்கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களிலிருந்து தொழிலதிபர்கள், தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், சுயதொழில் செய்பவர்கள், வர்த்தகர்கள் வணிகர்கள் மற்றும் தொழில் துறை மாணவர்கள் பங்கேற்றனர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8000–க்கும் மேற்பட்ட பொருட்களானது 420 அரங்குகளில் அமைக்கப்பட்டன. வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரிபாகங்கள்,

இரசாயனப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளாண்மை கருவிகள், கட்டுமான தொழில் சார்ந்த உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உட்பட 187 அரங்குகளும், அரசு பொதுத்துறை சார்ந்த பூம்புகார் நிறுவனம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட், சிறு தொழில் வளர்ச்சி கழகம், ஆவின் போன்ற 28 அரங்குகளும், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் மூலம் 10 அரங்குகளும் அமைக்கப்பட்டன. வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனை செய்யும் வகையில் கைவினைப் பொருட்கள், மரஉபயோகப் பொருட்கள், அணிகலன்கள், உணவு மற்றும் குளிர்பானங்கள், இயற்கை உணவு தயாரிப்பு பொருட்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்த 128 அரங்குகள் அமைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை 25,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்த தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை கண்காட்சியில் வைத்து தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒன்றிய மற்றும் மாநில அரசு பொதுத்துறை மற்றும் தனியார்

துறையின் முன்னணி நிறுவனங்களின் தயாரிப்பு பொருட்களை நேரடி கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளையும், தொழில் முனைவோர் புதிய தொழில் துவங்குவதற்கும் மானியத்துடன் கூடிய வங்கிகடன் பெறவும், குறு, சிறுதொழிலாளர்கள் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வழிவகை செய்தது. இக்கண்காட்சியில் தொழில்துறையில் சிறந்து விளங்கும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு இரண்டு நாட்கள் கருத்தரங்கம் நடைபெற்றது.

### 1.2 திறன் மேம்பாட்டு பயிற்சி

- சர்வதேச விமான போக்குவரத்தால் (IATA–CANDA) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளான Air Cargo Introductory & DGR, Passenger Ground Services & Reservation Ticketing, Foundation in Travel and Toursim வழங்கப்பட்டு வருகிறது.
- TCS iON நிறுவனத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பம், அனிமேசன் சம்மந்தப்பட்ட பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது

- TCS iON மற்றும் Apollo MedSkills நிறுவனத்துடன் இணைந்து இணைய வழி மருத்துவமனை நிர்வாக பயிற்சி (Finishing Skills for Nursing Excellance) வழங்கப்பட்டு வருகிறது
- இயந்திரவியல் சார்ந்த (Robotics) இயக்க பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### 1.4 உட்கட்டமைப்பு உருவாக்கம்

கட்டுமானப்பிரிவின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணாக்கருக்கு விடுதிகள், சமுதாயக்கூடம், பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், முதல் முறையாக பழங்குடியினர் கிராமங்களை நவீன கிராமங்களாக உருவாக்கிட பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலை, தார் சாலை, ஜல்லி சாலை, கழிவு நீர் கால்வாய், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் குடிநீர் குழாய், சமுதாயக்கூடம், தடுப்புச் சுவர், மயான காத்திருப்போர் கூடம், பேவர்பிளாக் அமைத்தல், நடைபாதை மற்றும் பழங்குடியினர் நல மக்களுக்கு 1500 வீடுகள் மற்றும் **உங்கள் தொகுதியில் முதல்வர்** திட்டத்தின்கீழ்

கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி மாணாக்கருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய நான்கு புதிய விடுதிக்கட்டடம் என மொத்தம் 1901 பணிகள் ரூ.570.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு 25 கட்டுமானப் பணிகள் ரூ.32.95 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 34 கட்டுமானப் பணிகள் ரூ.138.00 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**நிர்வாக சீர்த்திருத்தம்**

தாட்கோ மூலம் செயல்படுத்தபட்டு வரும் வாழ்வாதார திட்டங்களை சீர்படுத்திடவும் அத்திட்டங்களை மக்களுக்கு உரிய முறையில் கொண்டு செல்லவும், புதிய திட்டங்களை நடைமுறைபடுத்தவும், திட்ட மேலாண்மை அலகு **(Project Management Unit)** அமைக்கப்பட்டு மாநில திட்ட அலுவலர்கள் நிலையிலும் மற்றும் திட்ட செயலாக்க அலகு (Project Implementation Unit) அமைக்கப்பட்டு,

உதவி திட்ட அலுவலர் நிலையிலும் நியமனம் செய்யப்பட்டு, புதிய வாழ்வாதார திட்டங்கள் நடைமுறைபடுத்தபட்டு வருகின்றனர்.

வங்கிகள் விரைவாக பயானளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதை துரிதபடுத்தவும், சொத்து உருவாக்கத்தை உறுதி செய்வதற்கு, ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தாட்கோ இணையத்தில் மானியத்துடன் கூடிய கடன் பெற விண்ணப்பங்களை பரிசீலினை செய்து அவ்விண்ணப்பங்களை வங்கிகளுக்கு பரிந்துரை செய்ய ஏதுவாக 13 உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான தேர்வு குழுவினை சீரமைத்து மாவட்ட மேலாளரை தலைவராகவும், மண்டல திட்ட அலுவலரை (வங்கி மேலாளர்) உறுப்பினராகவும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களால் பரிந்துரைக்கப்படும் பிரதிநிதியை உறுப்பினராகவும் கொண்ட குழு முன் ஆய்வு செய்து வழங்கும் பரிந்துரையின் அடிப்படையில் District Livelihood Credit Management Agency என்ற முகமைக்கு விண்ணப்பங்களை அனுப்ப ஏதுவாக குழு அமைக்கப் பெற்றுள்ளது.

## 2. வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 2.1 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி / விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கு சீருடை தைத்து வழங்குதல்

- 2023-2024-ஆம் நிதி ஆண்டில் பழங்குடியின நல பள்ளி/ விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ / மாணவிகளுக்கு தலா நான்கு சீருடைகள் மற்றும் 8 மாவட்டங்களிலுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி/ விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ / மாணவிகளுக்கு தலா இரண்டு சீருடைகள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற தொழில் முனைவோர்களை கொண்டு தைத்து வழங்கப்படுகிறது.
- இதன் தொடர்ச்சியாக 2024-2025-ம் நிதி ஆண்டின் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல பள்ளி மற்றும் விடுதிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு தலா நான்கு சீருடைகள் அதே தொழில் முனைவோர்களை கொண்டு தைத்து வழங்கப்படுகிறது.

## 2.2 பழங்குடியினர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பழங்குடியினர் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை கொண்டு 'மதுரம்மா எண்டர்பிரைசஸ் சினாக்ஸ்' என்ற நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தட்டை, முறுக்கு போன்றவற்றை தயாரித்து வருகிறது. TVS Pvt Ltd, Hosur என்ற நிறுவனம் தங்களிடம் பணிபுரிந்துவரும் ஊழியர்களுக்கு மாலை சிற்றுண்டியாக இந்நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்கிறது.

இதன் தொடர்ச்சியாக இந்நிறுவனத்தை ACHUBALU – TAHDCO ADI DRAVIDAR TRIBAL ADVANCEMENT SOCIETY–ஆக உருவாக்கி இச்செயல்பாட்டினை சிறப்பாக செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## 2.3 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளி / பழங்குடியினர் நல பள்ளி / விடுதிகளுக்கு தரமான உணவு வழங்குதல்

பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய மற்றும் கடனுதவி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition என்ற நிறுவனத்தில் தரமான உணவு தயார் செய்து வழங்குவதற்கான ஒருவார காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, சுய உதவி குழுக்கள் மூலம் எட்டு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு மூன்று வேளையும் தரமான மற்றும் சுகாதாரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் சமையலறைகளுக்கு தேவையான நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய உபகரணங்கள் ஒரு விடுதிக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 8 விடுதிகளுக்கு ரூ.40.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 விண்வெளி விழிப்பு பயிற்சி

360 Flying club Chennai என்ற நிறுவனத்தின் மூலம் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு

ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறையில் 9 முதல் 11 –ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு, விண்வெளி விழிப்பு பயிற்சி, விமான விண்வெளி ஆய்வு, ஆளில்லா வான்வெளி பயிற்சி மூலம் ஏர்ஷோக்கைளை நடத்துவது மற்றும் ட்ரோன்கள் மூலம் பறக்கும் கொள்கை குறித்தும், **ஐஐடி போயிங் தேசிய ஏரோமாடல் போட்டியில்** கலந்து கொள்ள மாணாக்கருக்கு விழிப்புணர்வு பயிற்சி அளித்து மாணாக்கர்களின் அறிவுத்திறன் அடிப்படையில் தாங்களே சொந்தமாக விமான மாதிரிகளை வடிவமைக்க பயிற்சி வழங்கப்படுகிறது.

முதல் சுற்று போட்டி தேர்வு நடத்தப்பெற்றதில் இந்தியா முழுவதும் 7 மாநிலங்களிலிருந்து 490 அணிகளில் 70 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதி கட்ட போட்டியில் 10 இடத்திற்குள் ஆதி திராவிடர் நலத்துறை சார்ந்த அணி இடம்பெற்றுள்ளது.

2023–24 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ.12.62 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 2.5 நிலம் வாங்கும் திட்டம்

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிட மகளிரை நில உடமையாளர்களாக

மாற்றி சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் 2004–2005–ஆம் ஆண்டு முதல் நிலம் வாங்கும் திட்டமானது மகளிரின் பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட வேண்டிய நிலங்கள் பிற இனத்தவரிடமிருந்து வாங்கப்பட வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத் தாள் மற்றும் பதிவு கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, நிலத்தின் சந்தை மதிப்பு உயர்ந்துள்ளதால், இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, சந்தை மதிப்பில் 50 விழுக்காடு அல்லது அதிகப்பட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. மானிய தொகை போக கிரையத் தொகையினை பயனாளிகள் அளிக்க ஏதுவாக தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து (NSFDC) நிதியினை பெற்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) மூலம் கடன் வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2023-24ஆம் நிதியாண்டில் 191 பயனாளிகளுக்கு ரூ.896.22 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.6 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், மகளிர் முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தோட்டக்கலை, மலரியல், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்கள் மேற்கொள்ளவும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப்படுகிறது.

தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சுய உதவிக் குழுக்கள் இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்டு, ஒரு மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள தனிநபருக்கான மானியத் தொகை ரூ.50,000/- வீதத்தில் 12 உறுப்பினர்களுக்கு அதிகபட்ச மானியத் தொகை ரூ.6,00,000/-(ரூபாய் ஆறு இலட்சம்) மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2023–2024–ஆம் ஆண்டில் 229 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.7 விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற மானிய உதவித்திட்டம்

விவசாயத்தில் பல்வேறு தேவைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு போன்ற சூழ்நிலைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெறுவதற்காக 90 விழுக்காடு மானியம் மற்றும் 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2023–2024–ஆம் நிதியாண்டில் 100 பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான வைப்புத் தொகையாக ரூ.2.33 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

## 2.8 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் துவங்குதல் மற்றும் நவீனப்படுத்துதல்

கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு பால்பண்ணை, பால் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை

இச்சங்கம் ஏற்படுத்தி தருகிறது. 3,000 உறுப்பினர்களைக் கொண்ட புதியதாக 60 சங்கங்களை ஏற்படுத்தவும், ஏற்கனவே இயங்கி வரும் 40 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம் 2023–2024–ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சங்கத்திற்குத் தேவையான பதிவேடுகள், பரிசோதனை உபகரணங்கள், பால் குவளை மற்றும் கணினியுடன் கூடிய அச்சுப்பொறி வாங்குவதற்காக புதியதாக துவங்க உள்ள 60 மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ஒரு சங்கத்திற்கு ரூ.1.65 இலட்சம் வீதம் ரூ.99.00 இலட்சம் மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் 40 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை நவீனப்படுத்த ஒரு சங்கத்திற்கு ரூ.65,000/– வீதம் ரூ.26.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.125.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.9 ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டம் Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojana (PM–AJAY)

விரிவான வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்கள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், அடிப்படை வசதிகள்

ஏற்படுத்தல் போன்ற திட்டங்கள் ஒன்றிய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனிநபருக்கான திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/- இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக விடுவிக்கப்படும். பின்வரும் வருவாய் ஈட்டும் தொழில்கள் புரிந்திட உதவும் வகையில் வங்கிகள் மூலம் மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

- கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் ஆடு அலகு அமைத்தல்.
- மீன் வளர்ப்பு மற்றும் மீன் பிடிக்க தேவையான மீன்பிடி படகு வலை வாங்குதல்.
- பல்பொருள் அங்காடி, எழுதுபொருள் விற்பனை, உடற்பயிற்சிக் கூடம், அழகு நிலையம், வெதுப்பகம்

இத்திட்டத்தின் கீழ், 2023-2024-ஆம் நிதியாண்டில் 9,444 பயனாளிகளுக்கு ரூ.5119.26 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.10 தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC) மூலம் கடன் உதவி

ஆதிதிராவிடர்களுக்கு என்று சிறப்பு நேர்வாக தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை குறைந்த வட்டிக்கு பெற்று காலமுறைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிட மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற முழுநேர பட்டப்படிப்பு பயில்வதற்காக குறைந்த வட்டியில் (மாணவியருக்கு 4 விழுக்காடு மற்றும் மாணவர்களுக்கு 4.5 விழுக்காடு) கல்விக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், 2023–2024–ஆம் நிதியாண்டில் கல்விக்கடன் திட்டத்தின் கீழ் 59 மாணாக்கருக்கு ரூ.178.46 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

காய்கறி, பழச்சந்தைகள் மற்றும் பல்வேறு தரப்பட்ட சந்தைகளில் பல்வகை பொருட்களை விற்பனை செய்யும் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து, அன்றாடம் சிறு வியாபாரம் செய்ய ஏதுவாக குறைந்த

வட்டியில் (4 விழுக்காடு) சிறு வணிக கடன் (Micro Credit Finance) வழங்கப்பட்டு வருகிறது.

காலமுறைக்கடன் திட்டத்தின் கீழ் 46 பயனாளிகளுக்கு ரூ.80.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**2.11. தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSKFDC) மூலம் கடன் உதவி**

தூய்மைப் பணிபுரிவோர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை பெற்று குறைந்த வட்டியில் பல்வேறு காலமுறைக்கடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் ஆண்டில் காலமுறை கடன் திட்டத்தின்கீழ் 587 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு ரூ.109.06 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.12. தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) மூலம் கடன் உதவி

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை குறைந்த வட்டிக்கு பெற்று பழங்குடியினருக்கு காலமுறைக்கடன் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற படிப்புகள் பயில குறைந்த வட்டியில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து ரூ.20.00 கோடிக்கு நிதி பெற்று காலமுறைக்கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2023−2024−ஆம் ஆண்டு 8 பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.11.87 இலட்சம் கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 3. இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த திறன் மேம்பாட்டு பயிற்சி அவசியம். இப்பயிற்சிகள் சமூக முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதால், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் அல்லது தேசிய திறன் மேம்பாட்டு

கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறுபட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 3.1. இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ் மூலம் பட்டப்படிப்பு

இந்திய தொழில்நுட்பக் கழகம், மெட்ராஸ் (IIT – Madras) ஆல் இணைய வழியாக வழங்கப்படும் இளங்கலை தகவல் அறிவியல் மற்றும் பயன்பாடு (BS–Data Science and Application) நான்கு வருட பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெறும் மாணாக்கருக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

மாணாக்கர் ஒரே நேரத்தில் தங்களுக்கு விருப்பமான பட்டப்படிப்பினை படித்துக்கொண்டே இப்படிப்பினை இணையதளம் வழியாக பயிலலாம்.

இத்திட்டத்தின் கீழ் 2023–2024–ஆம் நிதியாண்டில், 93 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கு ரூ.1.41 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு, நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 16 மாணாக்கர் ரூ.19.02 இலட்சம் செலவில் இப்படிப்பினை பயின்று வருகின்றனர்

## 3.2 HCL நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய நான்கு வருட பட்டப்படிப்பு

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு HCL நிறுவனத்தில் ஓராண்டு கால பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுக்கு பயிற்சியளித்து அதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கருக்கு ஓராண்டு பயிற்சிக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2023–2024–ஆம் நிதியாண்டில் 33 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி ரூ.2.48 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு, நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 19 மாணாக்கருக்கு ரூ.22.42 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 3.3. ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில் நுட்ப பட்டப்படிப்பு

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர் சென்னை தரமணியில் உள்ள ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இளங்கலை

ஹோட்டல் நிருவாகம் மற்றும் விருந்தோம்பல் (B.Sc – Hospitality & Hotel Administration) மூன்று வருட முழுநேர பட்டப்படிப்பு மற்றும் உணவு உற்பத்தி பட்டயப்படிப்பு பயில நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2023–2024–ஆம் நிதியாண்டில் இப்படிப்புகளைப் பயில 26 மாணாக்கருக்கு ரூ.75.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 3.4 வங்கி போட்டித் தேர்விற்கான பயிற்சிகள்

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் வங்கிகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வேலைவாய்ப்பினை பெற சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–24–ஆம் நிதியாண்டில் ரூ.46.88 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு இப்பயிற்சியின் மூலம் 709 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.5. மருத்துவக் குறியீடு (Medical Coding) பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சிபெற்ற மாணாக்கருக்கு மருத்துவக் குறியீடு (Medical Coding) க்கான பயிற்சி அளிக்கப்பட்டு இந்திய மென்பொருள் நிறுவனங்களில் மருத்துவ குறியீட்டுக்கான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில், 135 மாணாக்கருக்கு ரூ.20.25 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### 3.6. ட்ரோன் (Drone) இயக்கப் பயிற்சி

தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ், 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ட்ரோன் நிபுணத்துவம் பெறவும், விவசாய நிலங்களில் பூச்சிக்கொல்லிகள் மற்றும் நுண் உரங்களை தெளிப்பதற்காக சொந்தமாக ட்ரோன் வாங்கி இயக்கவும் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (MIT) மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மையம் மூலம் ட்ரோன் இயக்கப் பயிற்சி வழங்கப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.117.12 இலட்சம் செலவில் 192 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மூலம் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.7. விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி வழங்கப்பட்டு ,அதன் தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரிய வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.187.57 இலட்சம் செலவில் 235 மாணாக்கர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.8. ஒப்பனையியல் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு அழகு நிலையங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்காக முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ரூ.133.29 இலட்சம் செலவில், 277 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 3.9 வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான பயிற்சி (Aspiring Minds Computer Adaptive Test)

இளநிலை மற்றும் முதுகலை இறுதியாண்டு படிக்கும் மாணாக்கர் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் 1000 ஆதிதிராவிட மாணாக்கருக்கு ரூ.100.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படுகிறது.

### 3.10 பொது நுழைவுத் தேர்வு பயிற்சி (Common Admission Test – CAT )

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கருக்கு இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) போன்ற கல்வி நிறுவனங்களில் முதுகலை வணிக மேலாண்மை (MBA) மேற்படிப்பு படிக்க நடத்தப்பெறும் பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறும் வகையில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 119 மாணாக்கருக்கு ரூ.44.18 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 43 மாணாக்கர் பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**3.11 மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (SSC) போட்டித்தேர்வுக்கான பயிற்சி**

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வேலைவாய்ப்பினை பெற சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2023–24 ஆம் நிதியாண்டில், ரூ.25.52 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இப்பயிற்சியின் மூலம் 511 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.12 தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்** (TNPSC) **போட்டித் தேர்வுக்கான பயிற்சி**

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தும் தொகுதி–2 மற்றும் தொகுதி–4 போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வேலைவாய்ப்பினை பெற சிறந்த பயிற்சி

நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–24 ஆம் நிதியாண்டில், ரூ.41.24 இலட்சம் மதிப்பில் போட்டித் தேர்வுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 3.13 இதர திறன் மேம்பாட்டு பயிற்சி

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளான வார்டு பாய், இலகுரக மோட்டர் வாகன ஓட்டுநர், நான்கு சக்கர வாகன ஓட்டுநர், வீட்டு வேலை பராமரிப்பு (பொது), வாடிக்கையாளர் பராமரிப்பு நிர்வாகம் போன்றவைகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.55.07 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு இப்பயிற்சியின் மூலம் 598 இளைஞர்கள் பயன் அடைந்துள்ளனர்.

### 3.14 தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் (NFDC– National Film Development Corporation) மூலம் திரைத்துறை சார்ந்த பயிற்சி

கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் ஆதிதிராவிட பழங்குடியின மாணாக்கருக்கு தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் (NFDC– National Film Development Corporation) மூலம் திரைத்துறை சார்ந்த பயிற்சிகளான மல்டிமீடியா டிசைனிங், (Multimedia Designing) டிஜிட்டல் ஸ்டில் போட்டோகிராபி, (Digital Still Photography) சோஷியல் மீடியா ஜம்ப்–ஸ்டார்ட்(Social Media Jump–Start) போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2023–24 ஆம் நிதியாண்டில் ரூ.18.91 இலட்சம் செலவில், 227 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 3.15 பொறியியல் மாணாக்கருக்கு முன்மாதிரி செயல்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் – ProtoSem பயிற்சி

பொறியியல் பட்டப்படிப்பு முடித்த/ இறுதியாண்டு படிக்கும் ஆதிதிராவிட பழங்குடியின மாணாக்கருக்கு முன்மாதிரி செயல்பாட்டை ஊக்குவிப்பதற்கான

ஒரு விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டப் (ProtoSem) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2023–24 ஆம் நிதியாண்டில் ரூ.17.84 இலட்சம் செலவில், 89 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 3.16 வெளிநாடுகளில் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேருவதற்குரிய நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி (IELTS, TOFEL, GRE, GMAT)

வெளிநாடுகளில் உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேருவதற்குரிய நுழைவுத்தேர்வுக்கான பயிற்சிக்காக 500 மாணாக்கருக்கு பயிற்சி அளிக்க பயிற்சி ஆணை வழங்கப்பட்டு முதற்கட்டமாக 81 மாணக்கருக்கு ரூ.18.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 3.17 NEET, JEE, CLAT, SPOKEN ENGLISH பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் உயர் கல்வியில் சேருவதற்குரிய நுழைவுத் தேர்வுகளான NEET, JEE, CLAT போன்றவைகளுக்கும் ஆளுமைத்திறன், ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி போன்றவைகளுக்கும்

ரூ.800.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக NEET, JEE நுழைவுத் தேர்வு பயிற்சிகளுக்கு 200 மாணாக்கருக்கு ரூ.55.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**3.18 மருத்துவ முதலுதவி பயிற்சி**

பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த இளைஞர்களுக்கு மருத்துவ முதலுதவி பயிற்சி வழங்கி மருத்துவமனைகளில் பணிபுரிய வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2023-24 ஆம் நிதியாண்டில் ரூ.40.65 இலட்சம் செலவில், 150 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**3.19 TCS iON நிறுவனத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அனிமேசன் சம்பந்தப்பட்ட பயிற்சி**

இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்த 1036 மாணாக்கருக்கு தேசிய அளவிலான தகுதித்தேர்விற்கான (NQT) பயிற்சி

TCS iON நிறுவனத்தின் மூலம் ரூ.5.15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு, தேர்வுபெற்ற 400 மாணாக்கருக்கு தகவல் தொழில் நுட்பம் மற்றும் அனிமேசன் சம்பந்தப்பட்ட பயிற்சிகளான Data Analytics and Reporting, Social Media & Text Analytics, Practical Approach to cyber security, Machine Learning for Real world Application, Intelligent Game Design and its Applications போன்றவைகளுக்கு ரூ.32.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

**3.20 மருத்துவம் சார்ந்த பல்வேறு பயிற்சிகள்**

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு மருத்துவம் சார்ந்த பல்வேறு பயிற்சிகளான அடிப்படை மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், அடிப்படை உதவி செவிலியர், அடிப்படை கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர், அடிப்படை எக்ஸரே தொழில்நுட்ப வல்லுநர் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் நிதியாண்டில் 80 நபர்களுக்கு ரூ.43.18 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 4. கட்டுமானப் பிரிவு

கட்டுமானப்பிரிவின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு விடுதிகள், சமுதாயக்கூடம், பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், முதல் முறையாக பழங்குடியினர் கிராமங்களை நவீன கிராமங்களாக உருவாக்கிட பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளும் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு 1,500 வீடுகள் கட்டுமானப் பணிகள் என மொத்தம் 1,901 பணிகள் ரூ.570.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2024–2025–ஆம் நிதியாண்டின் பணிகள் விவரம்**

| திட்டம் | கூறுகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| PM–AJAY, BJRCY, EMRS | விடுதிகள் | 10 | 34.23 |
| மாநில திட்டம் (ஆதிந) | விடுதிகள், பள்ளிகள், சமுதாயக்கூடம் மற்றும் அடிப்படை வசதி எற்படுத்துதல் | 109 | 230.01 |

| திட்டம் | கூறுகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| மாநிலத் திட்டம் பழங்குடியினர் நலம் | விடுதிகள், பள்ளிகள், சமுதாயக்கூடம் மற்றும் அடிப்படை வசதி ஏற்படுத்துதல் | 122 | 71.12 |
| நபார்டு | விடுதிகள் மற்றும் பள்ளிகள் | 160 | 155.85 |
| பழங்குடியினர் நலம் | வீடுகள் | 1,500 | 79.28 |
| **மொத்தம்** | | **1,901** | **570.49** |

### 4.1 ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தில் உள்ளடக்கிய பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தின்கீழ் 5 மாணவ, மாணவியருக்கான விடுதி கட்டடங்கள் ரூ.7.98 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 5 மாவட்டங்களில் ரூ.26.25 கோடி மதிப்பீட்டில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான மாணவியர் விடுதி கட்டடங்கள் ஒன்றிய அரசின் நிதியிலும் ஆக மொத்தம் 10 விடுதிகள் ரூ.34.23 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது.

## 4.2 மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

நிலை உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், சுற்றுச்சுவர், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுதுபார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித்திட்டத்தின் கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின் கீழ் 231 பணிகள் ரூ.301.14 கோடி மதிப்பீட்டிலும், பழங்குடியினர் நல மக்களுக்கு 1500 வீடுகள் ரூ.79.28 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன.

## 4.3 நபார்டு திட்டப் பணிகள் (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

தற்போது, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு ரூ.155.85 கோடி மதிப்பீட்டிலான 160 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## IV. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு அளித்தல் போன்ற பணிகளுக்காக தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் அமைப்பாக தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் உருவாக்கப்பட்டு 13.10.2021 முதல் செயல்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் தலைமையில் இவ்வாணையம் செயல்படுகிறது. இந்த ஆணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவர்களது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் உறுப்பினர் செயலாளராக உள்ளார்.

இவ்வாணையத்தில் இதுவரை 3695 மனுக்கள் பெறப்பட்டு அவற்றுள் 2945 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

## V. நலக் குழுக்கள்

### அ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனை வழங்கும் விதமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண்.4(1)–இன்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 04.09.1961 அன்று உருவாக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.165, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே.1(2)) துறை நாள்.30.11.2023 இன் படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களை தலைவராகவும் 3 அலுவல்சார் உறுப்பினர்கள், 2 பழங்குடியினத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், 13 அலுவல்சாரா உறுப்பினர்கள் (பழங்குடியினர்) மற்றும் 2 பழங்குடியினர் அல்லாத அலுவல்சாரா உறுப்பினர்களை கொண்டு ஆன்றோர் மன்றம் திருத்தியமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் நல இயக்குநர் இம்மன்றத்தின் உறுப்பினர்–செயலாளர் ஆவார்.

## VI. நல வாரியங்கள்

### 1. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென புதிரை வண்ணார் நல வாரியம் 15.10.2009 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் இவ்வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலர் ஆவார். இவ்வாரியம் 03.08.2023 அன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,276 உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை

மேற்கொள்ள 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 2. தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்

தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 11.06.2007 அன்று 'தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்' அமைக்கப்பட்டது.

ஒரு துணைத் தலைவர், 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 12 அலுவல் சாரா உறுப்பினர்கள் கொண்டு இவ்வாரியம் 03.05.2023 அன்று திருத்தி அமைக்கப்பட்டது. தாட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலாளர் ஆவார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 68,700 உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொருட்டு ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் நிதியாண்டில், 6–வது மாநில நிதி ஆணையத்தின் மூலம் தூய்மைப்பணியாளர்கள் நல வாரியத்திற்கு ரூ.15.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3,078 உறுப்பினர்களைக் கொண்ட 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் அமைப்பதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வீடற்ற தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அரசு மானியம் 90 விழுக்காடு, வாரியத்தின் பங்களிப்பு 9 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடு பயனாளிகளின் பங்களிப்புடன் 1000 வீடுகள் வழங்கப்படுகிறது.

முதற்கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12 பயனாளிகளுக்கு 15.05.2023 அன்று

வீடுகள் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 2022–23–ஆம் நிதியாண்டில் 448 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டது.

2023–2024–ஆம் நிதியாண்டில் 552 வீடுகள் பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கிட தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் பங்களிப்பாக ரூ.8.96 கோடி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்கள் மூலம் இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் தற்போது 98,478 உறுப்பினர்கள் உள்ளனர்.

### 3. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம்

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 11.06.2007 அன்று உருவாக்கப்பட்டது. பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலாளர் ஆவார்.

இவ்வாரியம் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள், 14 பழங்குடியின அலுவல் சாரா உறுப்பினர்கள் (2 சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட) மற்றும் 3 பழங்குடியினர் அல்லாத அலுவல்சாரா உறுப்பினர்களை கொண்டு 08.09.2023–இல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்கள் மூலம் இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தில் தற்போது 52,790 உறுப்பினர்கள் உள்ளனர்.

**4. நரிக்குறவர் நல வாரியம்**

நரிக்குறவர் நலவாரியம் 27.05.2008 தொடங்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.69,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 23.08.2023 – இன்படி பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது.

தற்போது அரசாணை (நிலை) எண்.139, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே1(1) துறை நாள்.30.10.2023 இன் படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களை தலைவராகவும் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 13 அலுவல்சாரா உறுப்பினர்களை கொண்டு நரிக்குறவர் நல வாரியம் திருத்தியமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலாளர் ஆவார்.

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் தற்போது 16,010 உறுப்பினர்கள் உள்ளனர்.

## VII. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2024–2025–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 14.28 | – | 0.50 | 14.78 |
| 2. | ஆதி திராவிடர் நலத்துறை | 2471.68 | 520.89 | – | 2992.57 |
| 3. | பழங்குடியினர் நலத்துறை | 380.18 | 312.64 | – | 692.82 |
| 4. | தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் | 5.87 | – | – | 5.87 |
| | மொத்தம் | 2872.01 | 833.53 | 0.50 | 3706.04 |

**என். கயல்விழி செல்வராஜ்,**
**ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.